Regiesrted at the G. P. O. as a Newspaper

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

போன் 389 National TAMIL DAILY தேசிய தினசரி தபாற் பெட்டி எண்: 49

மலர் 3 யாழப்பாணம். பிலவ ஆவணி 13 ஆம் நாள் ரவி அவ்வல் 17 (29-8-61) செவ்வாய்க்கிழமை இதழ் 168

வாசனை உலகில் ஓர் பரபரப்பு!
இன்பம் தரும் 33 303 3003 பத்திகளை
உபயோகியுங்கள்.
தயாரிப்பாளர்கள்:
S. V. முருகேசன் அன் சன்ஸ்
சென்னை பெங்களூர்–2. மதுரை

# கே. எம். பி. தண்டனை

தாராசிங்கின்

## உண்ணுவிரதத்தை நிறுத்த நேருஜி வேண்டுகோள்

### லோகசபையில் பிரதமர் அறிக்கை

புதுடில்லி, ஆக 28

மாஸ்டர் தாராசிங் தமது உண்ணுவிரதத்தைக் கைவிட வேண்டுமென பிரதம மந்திரி நேரு இன்று மீண்டும் கேட்டுக்கொண்டார். திரு. நேரு பஞ்சாப் தலைமை பற்றி லோக சபையில் ஒரு அறிக்கையை விடுத்த போதே இவ்வாறு வேண்டு கோள்விடுத்தார்.

அகாலி தலைவர் பட்டேசிங்குடன் நடத்திய பேச்சுவார்த்தைகள் பற்றி ஸ்ரீநேரு குறிப்பிட்டார்.

"சீக்கியர்கள் விஷயத்தில் பாரபட்சம் காட்டுவதாக அடிக்கடி புகார் கூறப்படுகிறது. இதில் உண்மை கிடையாது. எந்த வகையில் பாரபட்சம் காட்டப்படுகிறது என்பதை விசாரித்தறிய உயர் வட்டார விசாரணைக் கமிஷனை நியமிப்பதாக நான் பட்டேசிங்கிடம் கூறினேன். அவர் அதை ஏற்கவில்லை.

பஞ்சாபி மொழிபற்றி கேட்டதெல்லாம் கொடுக்கப்பட்டு விட்டது. இன்னும் ஏதாவது செய்ய வேண்டுமானால் அவ்விதம் செய்யத் தயாராய் இருக்கிறேன்.

பிராந்தியங்களுக்கு மேலும் கூடிய அதிகாரம் அளிக்கத் தயாராய் இருப்பதாக பட்டேசிங்கிடம் கூறினேன். ஆனல் சட்டமியற்றும் அதிகாரத்தைக் கொடுக்க மறுத்து விட்டேன். சட்டமியற்றும் அதிகாரம் வேண்டுமென்பதே பட்டேசிங்கின் வேண்டுகோள். நடை முறையில் தீங்கைவிளைவிக்கும் எனக் கருதுவதால் நான் அதற்கு இணங்கவில்லை. பஞ்சாபி சுபா தரமுடியாவிட்டால் பிராந்திய சபைகளுக்கு சட்டமியற்றும் அதிகாரம் தரவேண்டுமென பட்டேசிங் கேட்டார்.

உண்ணுவிரதத்தினல் எதையும் சாதிக்க முடியாது. தாராசிங்கின் உண்ணுவிரதத்தை நிறுத்தப் பல முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டது. ஆனல் அது பலிக்கவில்லை" எனவும் நேரு கூறினர்.

பிரதமரின் அறிக்கையைக் கேட்டபின், நாளை மாலை 4 மணிக்கு சபையில் ஒரு விவாதத்தை நடத்த சாநாயகர் அனுமதித்தார்.

நேருவின் அறிக்கை ராஜ்ய சபாவிலும் வாசிக்கப்பட்டது.

## கடலில் மீன்பிடிக்கச் சென்ற ஐவரைக் காணவில்லை

### ஒருவரின் சடலம் மீட்கப்பட்டது

மொரட்டுவை, திங்கள்

கடந்த சனிக்கிழமையன்று மொரட்டுவைக் கடலில் மீன்பிடிக்கச் சென்ற ஐந்து மீன்பிடித் தொழிலாளர்களைச் சில தினங்களாகக் காணவில்லை. இவர்களில் ஒருவரின் சடலம் நேற்றுக் கண்டெடுக்கப்பட்டது. இச்சம்பவம் மொரட்டுவை எகோடயுயன்ன கடற்கரையோரத்தில் ஒதுக்கப்பட்டுக் கிடந்தது. மற்றைய நால்வரையும்பற்றி எதுவித தகவலும் கிடைக்கவில்லை. காணுது போனவர்களை ஹெலிகாபடர் மூலம் தேடப்படுகின்றது.

## இந்தியஹைகமிஷனர் யாழ்ப்பாண விஜயம்

யாழ்ப்பாணம், செவ்வாய்

இந்திய ஹைகமிஷனர் ஸ்ரீ பி. கே. கபூர் நாளை புதன் கிழமை காலை 8-30 மணிக்கு கொழும்பிலிருந்து விமானமார்க்கமாக பலாலி விமானநிலையம் வருகின்ருர். காங்கேசன் துறை 'ரஸ்ட்ஹவுஸில்' அவர் இரு நாட்கள் தங்கியிருப்பார். யாழ்ப்பாண நூல்நிலையம், இந்தியன் ஹாண்ட்லூம்ஸ், கோப்பாய் நெசவுசாலை, நீர்வேலி முதலிய இடங்களைப் பார்வையிடுவார். மேயர் மாலை 4 மணிக்கு ஹைகமிஷனருக்கு ஒரு சிற்றுண்டி உபசாரமளிக்கின்ருர். இரவில் "இந்தியன் ஹாண்லூம்ஸ்" ஸ்ரீ கபூருக்கு விருந்தளிக்கின்றது.

31-ந் திகதி வியாழக்கிழமை காலை 8 மணிக்கு கீரிமலை ஆலய தரிசனம். 9 மணி சிமிந்தி தொழிற்சாலை. 10 மணிக்கு ராமநாதன் கல்லூரி. மூளாய் கூட்டுறவு ஆஸ்பத்திரியைப் பார்த்துவிட்டு, யாழ்ப்பாணம் "பாம்கோட்" ஹோட்டலில் இங்குள்ள இந்திய பிரமுகர்களை சந்திப்பார். மாலையில் கொக்குவில் இந்துக்கல்லூரி, யாழ்ப்பாண இந்துக்கல்லூரி முதலியவற்றைப் பார்த்துவிட்டு, ஜில்லா நீதிபதி தனபாலசிங்கத்தின் வீட்டில் சிற்றுண்டி அருந்துவார். மறுநாள் வெள்ளிக்கிழமை 1-30க்கு கொழும்புக்கு விமான மூலம் புறப்படுகிருர்.



கல்வி அமைச்சர் பதியுதீன் மாமூத் யாழ்ப்பாணத்துக்கு விஜயம்செய்தபோது அவருக்குப் பலாலி விமான நிலையத்தில் வரவேற்பு அளிக்கப்பட்டது.

## யாழ்ப்பாணத்தில் தமிழ் கலாசார பல்கலை கழகம்

### இராமநாதன், பரமேஸ்வரா கல்லூரிகள் தகுந்தவை

கல்வி மந்திரியின் கருத்து

யாழ்ப்பாணம், செவ்வாய்

யாழ்ப்பாணத்தில் தமிழ் கலாசாரப் பல்கலைக் கழகத்தை நிறுவுவதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் மிக விரைவில் எடுக்கவிருப்பதாக யாழ்ப்பாணத்துக்கு விஜயஞ்செய்த கல்வி அமைச்சர் கருத்து வெளியிட்டிருக்கிருர்.

ஒரு கலாசார பல்கலைக் கழகத்தின் தரத்துக்கு உயர்த்துவதற்கான தகுதி இராமநாதன் கல்லூரிக்குண்டென்பதை அங்கு நேரில் சென்று பார்வையிட்ட கல்வி மந்திரி பதியுதீன் மஹமூத் ஏற்றுக் கொண்டதுடன் உடனடியாக அதனைத் தமிழ்கலாசாரப் பல்கலைக் கழகமாக மாற்ற வேண்டுமென்பதை வலியுறுத்தி அங்குள்ள பதிவுப் புத்தகத்தில் எழுத்துமூலம் தமது கருத்தை வெளியிட்டார்.

கலகதர எம். பி அப்துல் ஜபார் மூதூர் எம். பி. ஏ. எல். ஏ. மஜீத் ஆகியோர் சகிதம் இராமநாதன் கல்லூரிக்கு அவர் தமது பாரியாருடனும் பிள்ளைகளுடனும் வந்து சேர்ந்தபோது முன்னை நாள் தபால் வானெலி அமைச்சரின் பாரியாரான திருமதி நடேசன் உட்படப் பலபிரமுகர்கள் வரவேற்று கல்லூரி கட்டிடம் முழுமையையும் சுற்றிக் காண்பித்தனர். சேர். பொன் இராமநாதனின் சமாதிக்கும் அவர் அழைத்துச் செல்லப்பட்டார்.

இந்து கலாசார பல்கலைக் கழகத்துக்கென பயன் படுத்தப்படவிருக்கும் மற்றொரு கல்லூரியான பரமேஸ்வரக் கல்லூரிக்குச் சென்று அமைச்சர் அங்குள்ள சேர். பொன் இராமநாதனின் நினைவுச் சின்னங்களாக விளங்கும் ஒவ்வொன்றையும் அவர் உன்னிப்பாகக் கவனித்தார்.

1915-ல் இலங்கையில் நடைபெற்ற சிங்கள முஸ்லிம் கலவரத்தின்போது இங்கிலாந்து சென்று சிங்கள மக்களை அபாயத்திலிருந்து காப்பாற்றித் திரும்பிய சேர் பொன் இராமநாதனுக்குக் கொழும்பில் நடந்த வரவேற்பைச் சித்தரிக்கும் படம் கல்வி மந்திரியின் மனதைப் பெரிதும் கவர்ந்து விட்டது. அவருடன் அதனை அருகில் சென்று பார்த்தவர்களில் ஒருவரான மூதூர் எம். பி. இப்படத்தைச் சிங்கள மக்கள் வசிக்கும் இடங்களுக்கு எடுத்துச்சென்று காட்டுவது வகுப்பு ஒற்றுமைக்கு உதவலாம் எனக் குறிப்பிட்டார்.

யாழ்ப்பாண எம். பி. திரு. ஏ. ரி. துரையப்பாவுடன் அமைச்சர் நண்பகல் விருந்துண்டார்.

மாலையில் பலாலி அரசினர் ஆசிரியப் பயிற்சிக் கலாசாலைக்கு விஜயம் செய்தார். நேற்று மாலை விமான மூலம் கொழும்புக்குப்பிரயாணமானுர்.

## 2 மாதம்! கவர்னர்ஜெனரல் குறைத்து விட்டார்!

### மற்ற குற்றவாளிகளுக்கு அதிர்ஷ்டம்

கொழும்பு, திங்கள்

வெளிமடை எம். பி. யான திரு. கே. எம். பி. ராஜரத்னுவின் தண்டனை 18 மாதக் கடுங்காவலிலிருந்து 2 மாதங்களுக்கு குறைக்கப்பட்டு விட்டது.

நீதி மந்திரியின் யோசனையின் மீது கவர்னர் ஜெனரல் தமது விசேஷ அதிகாரத்தால் இவ்வித உத்தரவு பிறப்பித்துள்ளார்.

பதுளை கோர்ட்டிலே 18 மாத தண்டனை பெற்ற மற்ற 8 எதிரிகளுக்கும் இவ்விதமே தண்டனை குறைக்கப்பட்டுள்ளது.

இத்தண்டனை குறைப்பின் பயனுக திரு. கே. எம். பி. தமது பார்லிமெண்ட் ஸ்தானத்தையும் அரசியல் உரிமைகளையும் இழக்கமாட்டார்.

வகுப்புக் கலவர காலத்தில் கே. எம். பி. யும் மற்றும் 8 பேர்களும் ஒரு கடையை நாசப்படுத்தி, அக்கடைக்காரரைத் தாக்கியதாகக் குற்றம் சாட்டப்பட்டு கீழ்க்கோர்ட்டில் 30 மாதக் கடுங்காவல தண்டனை பெற்றனர். சுப்ரீம்கோர்ட் அப்பீலில் இத்தண்டனை 18 மாதங்களுக்குக் குறைக்கப்பட்டது.

## சம்பளக் கமிஷன் அறிக்கை வெளியாயிற்று

கொழும்பு, திங்கள்

திரு. வில்மட் பெரேராவை தலைவராகக் கொண்ட அரசாங்க சிப்பந்திகள் சம்பளக் கமிஷன் அறிக்கையும், திரு. டி. டபிள்யு ராஜபத்திரானவை தலைவராகக் கொண்ட தேசிய சம்பளக் கொள்கை கமிஷன் அறிக்கையும் நேற்றிரவு 9-30 மணிக்கு உத்தியோக முறையில் வெளியாகியுள்ளது.

## எச். எஸ். ஸி. பரீட்சை

கொழும்பு, திங்கள்

1961-ம் ஆண்டு எச். எஸ். ஸி. பரீட்சைக்குரிய விண்ணப்பப்பத்திரங்கள் இம்மாத நடுப்பகுதிக்குள் அனுப்பப்பட வேண்டும். ஆனல் சென்ற ஆண்டு டிசம்பர் மாதம் நடைபெற்ற எச். எஸ். ஸி. [illegible] முடிவு இன்னும் வெளியாகவில்லை.



பற்பொடிகளிலே சிறந்தது ஜெகஜோதி பற்பொடி என்று மக்கள் தீர்ப்பு கூறிவிட்டார்கள்.

இலங்கையின் பல பாகங்களிலும் துரிதமாக விற்பனையாகிறது.

ஜெகஜோதி அன்கோ, குருதெனியா, கண்டி.


# பல்கலைக்கழகத்தின் வெளி, உள் மாணவர்கள்

## வினப்பத்திரங்கள் பற்றி அடுத்த மாதம் முடிவு செய்யப்படும்

கொழும்பு, ஞாயிறு

பல்கலைக்கழக வெளி மாணவர்களுக்கும் பல்கலைக் கழகத்தில் வதியும் மாணவர்களுக்கும் ஒரே மாதிரியான வினப் பத்திரங்களைப் பரீட்சைக்குக் கொடுப்பதா அல்லது வெளிவாரி மாணவர்களுக்கு ஒன்றும் விடுதிகளில் வதியும் மாணவர்களுக்கு இன்னென்றும் என இரு தரப்பட்ட வினப்பத்திரங்களைக் கொடுப்பதா என்பது பற்றிப் பல்கலைக்கழக அதிகாரிகள் குழு வருகிற மாதம் தீர்மானம் செய்யவிருக்கிறது.

பல்கலைக் கழக ஆசிரியர்களில் ஒரு சாரார் வெளி மாணவர்களுக்கு வேறுமாதிரியான கேள்வித் தாள்களை வழங்க வேண்டும் எனக் கூறியுள்ளனர். இவர்கள் லண்டன் பல்கலைக்கழகம் கையாளும் முறையைச் சுட்டிச் காட்டுகின்றனர்.

வருகிற மாதம் இதுபற்றிய தீர்மானம் அறிவிக்கப்படுமெனவும் வெளி மாணவர்களுக்குரிய பாடத் திட்டங்கள் செப்டம்பர் நடுப்பகுதியளவில் தயாராகிவிடும் எனவும் பல்கலைக்கழக மேலதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

## கந்தளாய்ப் பகுதியில் தீ விபத்து

திருக்கோணமலை, திங்கள்

கந்தளாய்ப்பகுதியில் நேற்று மாலை .கந்தளாய் அக்ரபோதி ஆரம்பப் பாடசாலைக் கட்டிடத்தின் ஒரு பகுதியும், அருகேயமைந்துள்ள கிராமசுத்தித் தொழிலாளர் விடுதிகளும் தீக்கிரையாயின.

பாடசாலையிலிருந்த தளபாடங்கள் முதலியனவும் தீ விபத்திற்கு இலக்காயின. தொழிலாளர் விடுதிகளில் வசிக்கும் தொழிலாளர்கள் குடும்பத்தைச் சேர்ந்த ஏழு குடும்பங்கள் இருக்க வீடில்லாத அவலநிலையையடைந்துள்ளன.

தீ விபத்திற்கான காரணம் புலப்படவில்லை. பொலிசார் புலன் விசாரணை செய்கின்றனர். இதனல் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நிவாரண நிதி அளிக்க திருமலைப் பகுதி காரியாதிகாரி தீர்மானித்துள்ளதாகத் தெரியவருகின்றது.

24 மைல்களுக்கு அப்பால் உள்ள திருமலை நெருப்பணைக்கும் படையினர் வந்து சேர்ந்ததன்பின்புதான் நெருப்பு அணைக்கப்பட்டது.

## வியாங்கலையில் நபிகள் நாயகம் விழா

மத்துகம, திங்கள்

வியாங்கலையில் இவ்வருடம் நபிகள் நாயகம் மீலாத் தினம் முஸ்லிம் சிரேஷ்ட பாடசாலையில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இவ் விழாவில் மௌலவிகளான எம். ஐ. எம். எல். எம். ஸனூஸ் ஆலிம், ஏ. எஸ் எல். எம். ஹலீம் ஆலிம் ஆகியோர் ஹதீஸ் சொற்பெருகி காற்றினர்.

அன்று காலை இப் பாடசாலை மணவ மாணவிகள், ஆசிரியர்கள் எல்லோரும் ஹதீஸ் அட்டைகளைத் தூக்கிக்கொண்டு ஸலாவாத்து முழக்கத்துடன் ஊர்வலம் வந்தனர். பாடசாலைத் தலைமையாசிரியர் ஜனப் எஸ். எல். ஏ. அபுல்ஹசன் தலைமையில் பாடசாலை மாணவர்களினதும் பெற்ளோர்களினதும் திருக் குர் ஆன் மனனப் போட்டியும், இஸ்லாமியக் கீதப்போட்டி, பேச்சுப் போட்டி ஆகியவைகளும் நடை நடைபெற்றன.

போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கு ஜனப்கே. எல். எம். ஹாசிம் மரைக்கார் பரிசுகள் வழங்கினர்.

## கொழும்பில் புதிய தொழிற் பாடசாலை

கொழும்பு, திங்கள்

கொழும்பில் புதிய தொழிற் பாடசாலை ஒன்று விரைவில் நிறுவப்படவிருக்கிறது. இதில் 400 முழு நேர மாணவர்களும் 900 பகுதி நேர மாணவர்களும் பயிற்சி பெறுவார்கள். கனடா இதற்காக 10 லட்சம் ரூபாய் அளித்திருக்கிறது. அரசாங்கம் 15 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறது.


### தேவை

தினசரிப் பத்திரிகையில் அனுபவம் பெற்ற தமிழ் அச்சுக் கோர்ப்பவர்கள் (கம்போஸிட்டர்கள்) தேவை. விண்ணப்பிக்கவும். த. பெ. எண்: 49, யாழ்ப்பாணம்.

### உங்கள் நோய்

குணப்படுத்த உத்தரவாதம். நீரிழிவுக்கு 15 நாள் மருந்து ரு. 15-50. தொய்வுக்கு 10 நாள் மருந்து ரூ. 12-50. பல வியாதிகளுக்கும் நற்சாட்சிப் பத்திரங்ளடங்கிய கற்றலோக் (Catalogue) இனம்.

வைத்தியர் பரிபூரணநந்தர், கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

### வாடகைக்கு

வீடு — சகல வசதிகளுடன் கூடிய மூன்று அறைகளுள்ள வீடு சுண்டுக்குளியில் பள்ளிக் கூடங்களுக்கும், கச்சேரிக்கும் கிட்டியதாகவும் வாடகைக்கு இருக்கிறது. விபரங்கட்கு: 78, கண்டி வீதி, சுண்டுக்குளி.

### ஆயுள்வேத அரிய சாதனை

புற்று நோய்க்கு 'யோகீஸ்வர ரசம்' தமிழ்வைத்தியமுறைப்படி புற்று நோயை வேரறுக்க முடியுமென்பதை செயல்மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது. மிகக் கடுமையாகப் பாதிக்கப்பட்டோர் எம்மிடம் சிகிச்சை பெற்றுக் குணமடைந்துளர். தாய்க்குலத்தாருக்கு ஒரு வரப்பிரசாதமாக கிடைத்துள்ள அரிய மருந்து பெரும்பாடு நிவாரணி." தாமதமின்றிக் கலந்தாலோசியுங்கள்.

பொ. செல்லையா
ஆயுள்வேத வைத்தியர்,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

### மலிவு விற்பனை

"வெள்ளை கேம்பிறிக்" பள்ளிக்கூட 'யூனிபோம்' மற்றும் சகல தேவைகளுக்கும் உகந்தவை. 27" விலை 90 சதம் மாத்திரம். ஒருவருக்கு 10 யார் மட்டுமே கொடுக்கப்படும் டயரும்ஸ், மெயின் வீதி,யாழ்ப்பாணம். 21

### தேவை

எங்கள் காரச்சில் வேலை செய்வதற்கு மோட்டார் மெக்கானிக்குகளும், வேலை பழகுவோரும் தேவை. நேரில் விண்ணப்பிக்கவும். வினயக கிறீன் மோட்டார் வேக்ஸ், 46, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.


## 11 திருமணங்கள்

மத்துகம, திங்கள்

கடந்த வகுப்புக்கலவரத்தின் பொழுது சேதமாக்கப்பட்ட களுத்துறையிலுள்ள கதிர்வேலாயுத சுவாமி கோவில் இப்பொழுது சேதமாக்கப்பட்ட இடங்களெல்லாம் திருத்திச் செப்பனிடப்பட்டுள்ளது.

இக் கோவிலில் பல தோட்டங்களைச் சேர்ந்தவர்களின் பதினெரு திருமணங்கள் கடந்த 23-ந் திகதி நடைபெற்றது.

கோவில் பூசகர் திரு. நடராசா அவர்களே இத் திருமணங்களை முன்னின்று நடத்தி வைத்தார்.

## கூட்டுறவு முறையில் பொருளாதார விருத்தி

### நீர்வேலிக் கூட்டத்தில் பாராட்டு

யாழ்ப்பாணம், சனி

"ஒற்றுமை சீர்குலைந்திருக்கும் இந் நாட்களில் சிங்களவரும் தமிழரும் ஒற்றுமையை நிலைநாட்ட வேண்டியவர்களாக இருக்கிருர்கள். தமிழ்மக்கள் அனபுள்ளம் கொண்டவர்கள். அது அவர்களின் சிறந்த பண்பு. இந் நாட்டில் வாழும் இரு சமூகத்தினரும் நாட்டின் நன்மைக்காக, எதிர்கால முன்னேற்றத்துக்காக ஒற்றுமையுடன் வாழவேண்டியது அவசியம்".

இவ்வாறு நீர்வேலி பாலர் விடுதிக்கு விஜயம் செய்த கண்டி முன்னுள் எம். பி. யும், மாநகரசபை அங்கத்தினருமான திரு. பிரட். டி. சில்வா அங்நிலையத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசும்போது தெரிவித்தார். இச் கூட்டத்துக்கு மாதர் சங்கத் தலைவி திருமதி வேதவல்லி கந்தையா தலைமைதாங்கினர்.

சிங்களவரான திரு. பிரட். டீ. சில்வா தமது உரையைத் தமிழிலேயே நிகழ்த்தினர்.

திரு. சில்வாவுடன், பிரித்தானிய ஸ்தானிகராலயத்தைச் சேர்ந்த திரு. டி. ஆர். டீன், திருமதி டீன், லண்டன் சர்வ கலாசாலையைச் சேர்ந்த செல்வி. கிறீன்வே ஆகியோரும் சென்ற புதன்கிழமை நீர்வேலிக்கு விஜயம் செய்து அங்குள்ள பல பொதுஸ்தாபனங்களையும் பார்வையிட்டனர்.

திரு. சில்வா தொடர்ந்து பேசியதாவது:-

எமது மக்கள் உங்களைப் போன்ற சாதனையெதையும் பொது விவகாரத்தில் செய்யவில்லை. கண்டியிலிருக்கும் மக்கள் உங்களிலும் பார்க்க எவ்வளவோ பின் தங்கியிருக்கிருர்கள். தமிழ் மக்களின் ஒற்றுமையைப் பிரதிபலிக்கும் பணிகளை இந்த ஸ்தாபனத்திலின்றும் காணக்கூடியதாகவிருக்கிறது. சிங்கள மக்கள் மத்தியில் பொதுமக்கள் தாமாகவே பாடுபட்டுச் பொதுச் சேவைசெய்யும் மனப்பான்மை இன்னமும் ஏற்படவில்லை. சிங்கள மக்கள் குறிப்பாக நீர்வேலி மக்களைப் பின்பற்ற வேண்டியவர்களாக இருக்கிருர்கள்.

திரு. டி. ஆர். டீன் பேசும்போது கூட்டுறவு முறையில் பொருளாதார விருத்தி காண்பதில் நீர்வேலி மக்களின் திறமையைப் பாராட்டினர்.

செல்வி கிறீன்வே, திருமதி டீன் ஆகியோரும் பேசினர்.

## இந்துசமய பரிபாலனசபை

திருக்கோணமலை, திங்கள்

திருக்கோணமலை கடற்படை ஸ்தல இந்து சமய பரிபாலன சபையின் முதலாவது வருடாந்தக் கூட்டம் சமீபத்தில் நடைபெற்றது.

பின்வரும் உத்தியோகத்தர்கள் புதுவருட நிர்வாக சபை உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டார்கள்:

தலைவர்: திரு. வீ. பூபாலபிள்ளை, உபதலைவர்: திரு. சு குட்டித்தம்பி, காரியதரிசி: திரு. சி. பொன்னம்பலம், உபகாரியதரிசி: திரு. சி. சின்னத்துரை, தனதிகாரி: திரு. வே. அரசரத்தினம். 18பேரைக் கொண்ட நிர்வாகக் குழுவும் தெரிவு செய்யப்பட்டது.

## பாலர் இசை வகுப்பு அங்குரார்ப்பணம்

கொடிகாமம், திங்கள்

"இசை ஒரு தெய்வக் கலை. இக் கலையை நன்கு கற்றவர்களிடத்திலும், அதனை ரசிக்கத் தெரிந்தவர்களிடத்திலும் தெய்வ சம்பந்தமான குணங்கள் நன்கு விளங்கும். இசையை இறைவனே பெரிதும் விரும்புகின்ருர். இதற்காகவே கோயில்களில் எல்லாம் இசையுடனே பூசை வைபவங்கள் நிகழுகின்றன. இப்படியான உயர் கலையை நாம் ஒவ்வொருவரும் தெரிந்திருக்க வேண்டியதவசியம். இதனை இளம் பிராயத்திலேயே பயிலத்தொடங்கவேண்டும். இளம் பிராயத்திலே இசை பயிலத் தொடங்கினுல் அது பசுமரத்தாணிபோல் நன்கு பதியும். ஸ்வரசப்தஸகன் எல்லாம் நன்கு மனதிற் பதியும். இனி இளம் பிராயத்திலேயே சிந்தனைகளைக் கடவுள் பக்தியில் வழிபடுத்த சங்கீதம் ஒரு சிறந்த கருவியாகிறது. இப்படியான கலையைக் கற்கும் ஒரு வகுப்பை ஆரம்பித்து வைப்பதையிட்டு மகிழ்ச்சியடைகிறேன்."

இவ்வாறு தென்மராட்சி முத்தமிழ்க் கலைமன்றத்தின் ஆதரவில் மட்டுவில் கமலாசனி வித்தியாசாலையில் ஒரு பாலர் இசை வகுப்பை அங்குரார்ப்பணஞ் செய்துவைக்கும் போது ஆசிரிய மணி திரு. வி. சுப்பையா கூறினர். சுமார் இருபது பிள்ளைகள் வகுப்பிற் சேர்ந்து கொண்டனர். சங்கீத பூஷணம் திரு. கே. ஏரம்பமூர்த்தி வகுப்பை நடத்தினர். மன்ற நிர்வாகத்தருள் ஒருவரான திரு. எஸ். கந்தையா கருமத்தை நடத்தி வைத்தார்.

## மும்மணிக்கோவை அரங்கேற்றம்

சுன்னுகம், திங்கள்

சுன்னுகம் மயிலணி (கந்தசுவாமி) முருகவேள் மும்மணிக்கோவை கந்தசுவாமி கோவில் மண்டபத்தில் கடந்த வெள்ளியன்று மாலை நிகழ்ந்தது.


10,000,000 மக்களும் விரும்பி வாங்குவன!
இலங்கை முழுவதும் புகழ் பரப்புவன!
எவை?

டொலர்

ALUMINIUM INDUSTRIES (CEYLON) LTD.
ONE DOLLAR
DOLLAR BRAND

பவுண் அடையாளம் உள்ள அலுமினியப் பாத்திரங்களே!
ஏன்?

டொலர் அலுமினியம் மாற்று உயர்ந்தது சுத்தம் உள்ளது!

டொலர் அலுமினியம் அழகு அமைப்பு கண்கவர்ச்சி உள்ளது!!

டொலர் அலுமினியம் உறுதி உழைப்பு உத்தரவாதம் உள்ளது!!!

எல்லாவற்றிற்கும் மேல்

உங்கள் தாய்ப் பொன்னுட்டில் மாவிட்டபுரத்தில் நவீன முறையில் செய்யப்படுவது!

டொலர் பவுணை பார்த்து வாங்குங்கள்
எங்கும் கிடைக்கும்

டொலர் மாத்திரமே உத்தரவாதமானது!

தயாரிக்குமிடம்:

அலுமினியம் இன்டஸ்ரீஸ் லிமி.,
மாவிட்டபுரம். யாழ்ப்பாணம்.

J. D. 3

# கல்லோயா சீனி தொழிற்சாலை வேலைகள்

## இந்தியர்களிடமிருந்து இலங்கையர் ஏற்றனர்

அம்பாறை திங்கள்

கல்லோயா சீனித் தொழிற்சாலை வேலைகளைச் சென்ற வாரம் இலங்கைத் தொழிலாளர் ஏற்றனர். இரண்டுமாத காலங்களாக கல்லோயாவில் கடமையாற்றிய இந்திய சிப்பந்திகளைக் கந்தளாய்க்கு அனுப்ப வேண்டியிருந்ததால் இவ்வாறு இலங்கையர்களை நியமிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

இவ்வருடம் ஜூன் முதலாம் திகதி கருப்பஞ்சாற்று வடி வேலைகள் ஆரம்பமாகியபோது கல்லோயா சீனி உற்பத்தி வேலைகளை இந்திய ரசாயன வல்லுனர்களும் இந்திய எஞ்ஜினியர்களும் தமக்குக் கீழ் ஆளுக்கு ஒன்பது இந்திய உதவியாட்களை வைத்து வேலைகளைச் செய்து வந்தனர். தொழிற்சாலை வேலைகளில் இவர்களுக்கு 215 இலங்கையர்களும் உதவி வந்தனர். 1,200 ஏக்கர் நிலத்திலும் விளைந்து முற்றிய கரும்பை ஜூன், ஜூலை, ஆகஸ்ட் மாதங்களிலேயே அறுவடை செய்து சாறு எடுப்பது அவர்களின் திட்டம். ஏளாந்த அறுவடை குறைவாக இருந்ததால் இன்னும் 400 ஏக்கர் அறுவடை செய்யப்படவிருக்கின்றன. இந்தியத் தொழிலாளர் கந்தளாய்க்குச் செல்ல வேண்டியதாகின்றது.

தமது சொந்த தொழிலாளர்களைக் கொண்டே ஒரு மாதத்திற்குத் தொடர்ந்து வேலைகளைச் செய்வதென கல்லோயா சபை தீர்மானித்துள்ளது. அக்டோபர் பருவப்பெயர்ச்சி மழைக்கு முன்னதாக அறுவடை முடிய வேண்டும். இலங்கைத் தொழிலாளர் வேலைகளை நன்கு செய்கிறார்கள் என்றும் செயல் முறைகளை விரைவில் பழகிக் கொள்கிறார்கள் என்றும் கல்லோயாத் தொழிற்சாலையில் கடமையாற்றும் இந்திய அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

---

### மாத்தறையில் இறைச்சித் தட்டுப்பாடு

மாத்தறை, திங்கள்

சென்ற சனிக்கிழமை மாத்தறையில் இறைச்சி வகை எதுவும் கிடைக்கவில்லை. அத்தோடு மீன், கருவாடு கூடக் கிடைக்காததால் மாத்தறை வாசிகள் மரக்கறி உணவோடு சமாளிக்கவேண்டியதாயிற்று.

தற்போதைய கட்டுப்பாட்டு விலையின்படி இறைச்சி வகைகளைத் தமக்கு விற்கமுடியாதிருக்கிறது என இறைச்சிக் கடைக்காரர்கள் மாத்தறை நகரசபைத் தலைவருக்கு ஒரு கடிதம் அனுப்பியுள்ளார்கள். மாட்டு இறைச்சி, ஆட்டு இறைச்சி ஆகியவற்றின் கட்டுப்பாட்டு விலையை முறையே ரூத்தல் 80 சதமும், 2 ரூபாய் 25 சதமுமாக உயர்த்தப்படாவிடின் தாம் இறைச்சிக்கடைகளை மூட வேண்டி நேரிடும் என இவர்கள் நகரசபைத் தலைவருக்குஎழுதிய கடிதத்தில் தெரிவித்துள்ளனர்.

காலியில் மாட்டு இறைச்சியின் கட்டுப்பாட்டு விலை ரூத்தல் 95 சதமாகையால் மாத்தறையிலுள்ள மாடுகள் அங்கு அனுப்பப்படுகின்றன என்றும் அதனாலேயேமாத்தறையில் மாட்டு விலை அதிகமாயிருக்கிறதென்றும் இறைச்சி வியாபாரிகள் தெரிவிக்கின்றனர். ஆடுகளின் தொகை குறைவாக இருப்பதாலேயே ஆட்டிறைச்சி விலை உயர்ந்துள்ளதாம்.

---

### யாழ்ப்பாணம் சாக்கடை அமைப்பு திட்டம்

யாழ்ப்பாணம், செவ்வாய்

ரூபாய் 6 லட்சம் பெறுமதியான யாழ்ப்பாண அரசாங்க ஆஸ்பத்திரி சாக்கடை அமைப்புத் திட்டத்தை நிறைவேற்றவிடாமல் யாழ்ப்பாண மாநகரசபை தடுத்து வைத்திருந்தது. யாழ்ப்பாண மேயரும் மாநகரசபை அங்கத்தவர்களும் சுகாதார சேவைப்பகுதி அதிகாரி டாக்டர் எச். டபிள்யூ. கருணரட்னவை யாழ்ப்பாண வாடி வீட்டில் சந்தித்துப் பேச்சு வார்த்தை நடத்திய பின்னர், யாழ்ப்பாணத்தில் சுகாதாரம் பாதிக்கப்படாமல் ஒருங்குகள் செய்யப்படுமென்று சுகாதார அதிகாரி அளித்த வாக்குறுதியின் பேரில், மேயர், யாழ்ப்பாண ஆஸ்பத்திரி சாக்கடை அமைப்புத் திட்டத்தை அரசாங்கம் மேற்கொள்வதற்கு தடையின்றி இணக்கம் தெரிவித்திருக்கிறார்.

பணியாளர் குறைவாகவும், நிதி பற்றாக் குறையாகவும் இருப்பதால் யாழ்ப்பாணத்தில் ஒரு புற்று நோய் ஆஸ்பத்திரியை அமைக்க முடியாதென்றும், நிதி நிலைமை சீர் திருந்தும் பட்சத்தில் புற்று நோய் ஆஸ்பத்திரி கண்டிக்கு அவசியமானதால் கண்டிக்கு முதலில் முக்கியத்துவம் கொடுக்கப்படும் என்றும் சுகாதார சேவைப் பகுதி அதிகாரி கருத்துத் தெரிவித்தார்.

யாழ்ப்பாண ஆஸ்பத்திரிக் கட்டிடங்கள் பற்றிக் குறிப்பிடும் போது, கட்டிட ஒப்பந்தக்காரர், துரிதமாக வேலையைக் கவனிக்காமல் இருப்பதால், யாழ்ப்பாண ஆஸ்பத்திரிக்கான புதிய கட்டிட வேலைகள் முடியாமல் இருக்கின்றன என்று அவர் தெரிவித்தார்.

வெளி நோயாளர் சிகிச்சை நிலையத்தில் பெண் டாக்டர்கள் அதிகமாக இருப்பதால் ஆண்கள் தங்கள் நோய் பற்றி வெளியாகச் சொல்ல முடியாமல் இருக்கின்றனர் என்று மேயர் முறையிட்ட போது, பெண் டாக்டர்கள் மேல் மேயருக்கு ஒரு வித வெறுப்பு இருப்பதாக சுகாதார அதிகாரி தெரிவித்தார்.

யாழ்ப்பாண ஆஸ்பத்திரியின் நிர்வாகம் திருப்திகரமாக இருக்கிறதாகவும் யாழ்ப்பாணத்திற்கான மத்திய மருந்துச் சாலையை அரியாலைப்பகுதியில் நிறுவத் தாம் ஆலோசிப்பதாகவும் சுகாதார சேவைப் பகுதி அதிகாரி டாக்டர் கருணரட்ன மேயரிடம் தெரிவித்தார்.

---

### தொழிற்சங்க பிரதிநிதிக்கு விருந்துபசாரம்

பதுளை, திங்கள்

பதுளை மாவட்ட தோட்டக் கணக்கப்பிள்ளை யூனியன் சார்பாக தொழில் நல்லுறவு அதிகாரி திரு. எம். ஜெயராம் தொழிற் சங்கப் பயிற்சிக்காக பிலிப்பைன் சென்று வந்ததைப் பாராட்டுமுகமாகபதுளை வாடிவீட்டில்ஒருவிருந்தளிக்கப்பட்டது.

அவ்விருந்தில் பதுளை எம். பி. திரு. பி. எச். பண்டார, சொர்ணதொட்ட எம். பி. திரு. எக்கநாயக்கா, தொழிற் சங்கப் பிரதிநிதிகள், பெரிய கங்காணிமார், சங்கப் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

---

### 'அறிஞர்களை நாடு பாராட்ட வேண்டும்'

காரைநகர், திங்கள்

புலவர்களையும் அறிஞர்களையும் பாராட்டாத நாடு ஒருபோதும் முன்னேறமாட்டாது. ஆகவே எமது சமூகம் புலவர்களையும் அறிஞர்களையும் ஆதரித்து அவர்களைப் பாராட்ட வேண்டுமென காரைநகர் சுப்பிரமணிய வித்தியாசாலையில் நடைபெற்ற தமிழ் வளர்ச்சிக் கூட்டத்தில் பேசும்போது வித்துவான் மு. சபாரத்தினம் குறிப்பிட்டார்.

காரைநகர் கிராமச் சங்கத் தலைவர் திரு. மு. அம்பலவாணர் கூட்டத்துக்குத் தலைமை தாங்கினார். அவர் தமது பேச்சில் நாட்டு மக்களுக்குச் சுதந்திர உணர்ச்சியை ஊட்டுவதற்குப் பாரதியாரின் பாடல்களே தூண்டுதலாக இருந்ததென்றும் இறந்தபின் அறிஞர்களைப் பாராட்டுவதைவிட்டு உயிருடன் இருக்கும் போதே அவர்களைப் பாராட்ட வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார்.

திருமுருகாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, பதிற்றுப்பத்து முதலிய சங்க நூல்களுக்கு ஆராய்ச்சியுரை எழுதி வெளியிட்ட பண்டிதர், புலவர் சு. அருளம்பலவனாருக்கு ஒரு பாராட்டுவிழா நடத்த வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது.

உத்தியோகத்தர் தெரிவு பின்வருமாறு நடைபெற்றது.

தலைவர் திரு. அ. மு. அம்பலவாணர், காரியதரிசி வித்துவான் மு. சபாரத்தினம், தனாதிகாரி ஸ்ரீ க. வைத்தீசுவரக் குருக்கள். திருவாளர்கள் க. சிற்றம்பலம், அ. சிவபாதம் என்போர் நிருவாகசபை அங்கத்தவர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

---

### சைவ சமயக் குருமாருக்கு பரீட்சைகளும் பட்டங்களும்

யாழ்ப்பாணம், செவ்வாய்

சைவ சமய குருமாருக்கேற்ற பரீட்சைகள் நடாத்தவும், தகுதி பெற்றவர்களுக்குப் பட்டமளித்துக் கௌரவிக்கவும் அகில இலங்கைச் சிவப்பிராமண சங்கம் முயற்சி செய்கின்றது.

இச் சங்கக் கூட்டம் சுன்னாகத்தில் சிவஸ்ரீ துரைச்சாமிக் குருக்கள் தலைமையில் நடைபெற்றது.

குருமாருக்கான வகுப்புகள் நடத்தி பரீட்சைகள் வைத்து பட்டங்கள் வழங்குவதெனவும் இதற்கென அச்சுவேலி சிவஸ்ரீ எஸ். குமாரசாமிக் குருக்கள் ஆலோசனையோடு மூன்று பரீட்சைகளுக்குரிய பாடத்திட்டம் தயாரிக்கப்பட்டிருப்பதாயும் இப் பரீட்சைகளில் தேறினோர் முறையே சிறந்த பூசகராயும், ஆசாரியராயும், பணியாற்றுவார்களெனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

அச்சுவேலி சிவஸ்ரீ குமாரசாமிக் குருக்களின் தலைமையில் ஒரு பரீட்சா சமிதி நிறுவிப் பரீட்சைகள் நடாத்த வேண்டுமென்னும் தீர்மானம் சபையில் ஏகமனதாய் நிறைவேறியது.

---

# குறைந்தவிலையில் 'பியர்' விற்பனை

## கூட்டுறவு மொத்தவிற்பனை ஸ்தாபன திட்டம்

கொழும்பு, திங்கள்

முற்றும் அரசாங்கத்துக்குச் சொந்தமான வடிசாலை ஒன்றை அமைக்க கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனம் உத்தேசித்திருக்கிறது. கசிப்பு உற்பத்திப் பெருக்கத்திற்கெதிரான இந்த நடவடிக்கையின் விளைவாய் அதிக பியர் முடியுமானால் குறைந்த விலைக்குக் கிடைக்க வழி ஏற்படும்.

சகல நகர, கிராமப்புறங்களிலும் குறைந்த விலையில் பியர் விநியோகிப்பதே கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனத்தின் உத்தேசம்.

---

### கடும் வரட்சியால் மக்கள் அவதி

பண்டாரவளை, திங்கள்

கடந்த சில மாதங்களாக ஊவா பகுதி முழுதும் மழை பெய்யாமல் கடும் வரட்சி ஏற்பட்டுள்ளபடியால் குடி தண்ணீர்த் தட்டுப்பாடு நிறைய ஏற்பட்டு மக்கள் பெரும் அவதிக்குள்ளாகியுள்ளனர்.

அநேக தோட்டங்களில் தேயிலைச்செடி காய்ந்து கருகி விட்டபடியால் தொழிலாளர்களின் வேலைநாட்களும் குறைந்துவருகிறது. இந் நிலை மேலும் சில மாதங்கள் நீடிக்குமானால் இதைவிடப்பன்மடங்கு கஷ்டம் ஏற்படுமென மக்கள் அஞ்சுகின்றனர்.

---

### தாச்சி சுற்றுப்போட்டி நடத்த முடிவு

யாழ்ப்பாணம், திங்கள்

சுதுமலை சனசமூக நிலையத்தால் இப்பொழுது நடத்தப்படும் தாச்சி விளையாட்டுப் போட்டியை ஒரு சுற்றுப் போட்டியாக்கி வெற்றியீட்டும் முதல் மூன்று கோஷ்டிகளுக்கும் வெற்றிக் கேடயங்களும், பரிசில்களும் வழங்குவதென சுதுமலை சனசமூக நிலைய நிர்வாகசபை முடிவு செய்துள்ளது.

---

### தபாற்கந்தோர் விஸ்தரிப்பு

#### சங்கானை கி. ச. தீர்மானம்

சங்கானை, திங்கள்

"வலிகாமம் மேற்கில் சங்கானை ஒரு முக்கிய வியாபார கேந்திரமாக விளங்குவதை முன்னிட்டும், அதற்கேற்ப பொருத்தமாக அமைந்த தபால் தந்திப் போக்கு வரத்துக்கு இதுவரை காலம் சேவை செய்து வந்த சங்கானை உப தபாற் கந்தோரை, சகல தபாற் தந்தி போக்கு வரத்து வசதிகளுடன் நிரந்தர தபாற் கந்தோர் அந்தஸ்துக்கு உயர்த்தும்படி இச் சபை அரசாங்கத்தைக்கேட்டுக்கொள்கிறது" எனும் தீர்மானமொன்று சங்கானை கிராமச்சங்கத்தில் நிறைவேற்றப்பட்டது.

இது சம்பந்தமாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளைத் தலைவர் பேட்டி காணவேண்டுமென்றும் முடிவு செய்யப்பட்டது.

இக் கூட்டம் திரு. என். முத்தையா தலைமையில் நடைபெற்றது.

---

### பொருள்கள் விலையேற்றத்தைக் குறைக்க கி. ச. கோரிக்கை

மானிப்பாய், திங்கள்

புதிய வரவு செலவுத் திட்டத்தில் சாதாரண மக்கள் உபயோகிக்கக்கூடிய தீப்பெட்டி, சீனி, மாவு ஆகிய பொருள்களின் விலையைக் குறைக்கும்படி அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானமொன்று மானிப்பாய் கிராமச் சங்கக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது. திரு. வி. கே. கணேசவேல் தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது.

4 சத விகித தேசிய அபிவிருத்தி வரியை, ரூ. 500 க்கு மேல் சம்பளம் பெறுவோருக்கு விதிக்கக்கூடியதாக மாற்ற வேண்டுமெனக் கேட்டுக்கொள்ளும் தீர்மமனமும் நிறைவேறியது.

---

### மல்லாகம் இரட்டைக் கொலை வழக்கு

#### பஸ் சாரதியை ரிமாண்டில் வைக்க உத்தரவு

யாழ்ப்பாணம், செவ்வாய்

மல்லாகம் இரட்டைக்கொலை வழக்கில் சம்பந்தப்பட்ட எதிரிகளில் ஒருவரான இ. போ. ச. பஸ் சாரதியான செல்லையா இராசதுரை மல்லாகம் மாஜிஸ்டிரேட் முன்னிலையில் வியாழக்கிழமை ஆஜர் செய்யப்பட்டார.

தலைமறைவாக இருந்த இருவரைச் சுன்னாகம் பொலிஸ் சார்ஜண்ட் திரு. முருகேசு கண்டுபிடித்து கோர்ட்டில் ஆஜர் செய்தார்.

மாஜிஸ்டிரேட் இவரை இம் மாதம் 29 ம் திகதிவரை ரிமாண்டில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

---

### 25 பேரின் சடலம் மீட்கப்பட்டது

புதுடில்லி, ஆக. 28

திருச்சிக்கருகில் ஏற்பட்ட பஸ்விபத்தின் விளைவாக மாண்டவர்களில் 25 பேரின் சடலம் இது வரை மீட்கப்பட்டிருப்பதாய் அறிவிக்கப்படுகிறது.

---

# 79 வைத்திய மாணவர்களுக்கு இடவசதியில்லை

## பல்கலைக்கழகத்தில் ஏற்பட்டுள்ள நிலை

கொழும்பு, திங்கள்

இலங்கைப் பல்கலைக் கழகத்துக்கு வைத்தியத்துறையில் நேரடியான பிரவேசம் பெற்றுள்ள 79 மாணவர்களுக்குப் பல்கலைக் கழகத்தில் இடவசதிகளில்லை. இடவசதிகளை ஒழுங்கு செய்தாலும்பல்கலைக்கழகத்தில் ஆய்வுகூட வசதிகள் இல்லை.

செப்டம்பரில் ஆரம்பமாகும் கல்வி வருஷத்தில் பல்கலைக் கழகம் புகவேண்டிய இம்மாணவர்கள் அனைவரும் கட்டட வசதிகள் ஒழுங்கான பின்னரே பிரவேசம் பெற்றுக்கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளனர்.

இக் கட்டடங்களைப் பேராதனையில் மராமத்து இலாகா நிறுவிவருகிறது. செப்டம்பர் மாதத்தில் கட்டடங்களெல்லாம் கட்டி முடிக்கப்பட்டாலும் ஆய்வுகூடத் தேவைகளை மாணவர்கள் பெற்றுக்கொள்ள முடியாது எனப் பல்கலைக்கழக அதிகாரிகள் கருதுகின்றனர்.

ஏற்கனவே மாணவர்கள் தம்மை அனுமதிக்க ஏற்பட்டுள்ள தாமதம்பற்றிப் பல்கலைக்கழக அதிகாரிகளுக்கு முறையிட்டுள்ளனர்.

தமது வைத்தியத்துறைப் பிரவேசத்திற்கு முன்னதாக, மூன்று மாதப் பயிற்சிக்குப் பிரவேசம் பெற்றுள்ள மாணவர்கள் முன்னதாகவே பிரவேசம் பெறுவராகையால் அவர்கள் தம்மிலும் பார்க்கச் சந்தர்ப்பம் கூடியவர்களாகிறார்கள் என இவர்கள் முறையிட்டுள்ளனர்.

மணிவாக்கு
தன்னலமின்மையும் நாணமுமே மெய்ஞ்ஞானத்தின் இலட்சணம்:
—ரஸ்கின்

# ஈழநாடு
EELA NADU

யாழ்ப்பாணம் பிலவ ஆண்டு ஆவணி மீ 13உ (29 8 61)

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna
Phone: 389.

## அரசியல் உண்ணாவிரதம்

பொட்டி ஸ்ரீராமுலு என்பவர் உண்ணாவிரதமிருந்து தம் உயிரைப் பலி கொடுத்ததால் ஆந்திர ராஜ்யம் கிடைத்தது போல் தாமும் உண்ணாவிரதமிருந்தால் சீக்கியர்களுக்குத் தனி ராஜ்யம் கிடைக்குமென்ற எண்ணத்துடன் பஞ்சாபில் அகாலி தலைவர் மாஸ்டர் தாராசிங் சென்ற 15 நாட்களாக உண்ணாவிரதமிருக்கின்ருர். எழுபது வயதுக்கு மேலான தாராசிங்கின் நிலைமை மிகக் கவலைக்கிடமாக இருப்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

'பஞ்சாபி சுபா' என்ற கோரிக்கையை சீக்கியர்களிலேயே பலர் எதிர்ப்பதாகத் தெரிகிறது. பஞ்சாபை சேர்ந்த 14 பார்லிமெண்ட் மெம்பர்களும் இப்போதுள்ள மொழி ஏற்பாடு திருப்திகரமாக இருப்பதாயும், அதை மாற்றுவதற்கு இது சரியான சந்தர்ப்பமல்லவென்றும் கூறி பிரதமர் நேருவுக்கு எழுதியுள்ள ஒரு கடிதத்தில் கேட்டிருக்கிருர்கள். அவர்களில் பலர் சீக்கியர்களென்பது குறிப்பிடத்தக்கது.

இதே சமயத்தில், மாஸ்டர் தாராசிங்குக்குப் போட்டியாக யோகிராஜ்சூரிய தேவ், ராமேச்வரானந்தர் இவ்விருவரும் 15 நாட்களாக உண்ணாவிரதமிருந்து 'பஞ்சாபி சுபா'வை எதிர்க்கின்றனர். இந்துக்களுக்கும் சீக்கியர்களுக்கும் வேற்றுமை கிடையாதென்றும், சமயத்தின் பெயரால் இவர்களைப் பிரிக்கப்படாதென்றும் சீக்கியர்களிலேயே பலரது கருத்து. பஞ்சாப் ராஜ்யத்தின் முதல் மந்திரியும் சீக்கியருமான சர்தார் பிரதாப்சிங் கைரோன், மாஸ்டர் தாராசிங்கின் உண்ணாவிரதம் நேர்மையற்றதென்றும், அதை அவர் மட்டுமன்றி மற்ற இருவரும் விட்டுவிட வேண்டுமென்றும் கேட்டுள்ளார். என்ருலும் மூவரும் தொடர்ந்து உபவாசமிருக்கிருர்கள். இதற்கிடையே பிரதமர் நேருஜியுடன் நடத்திய பேச்சுக்களும் முறிந்துவிட்டன.

ஆந்திர ராஜ்ய பிரிவினை விஷயத்தில் அங்கிருந்தவர்களிடையே ஏகோபித்த கருத்து இருந்தது. ஆனல் 'பஞ்சாபி சுபா' விஷயத்தில் அப்படி இல்லை. கருத்து வேற்றுமைகள் அதிகமுள்ளன. இது அரசியல் விஷயம். பலதரப்பட்டவர்களும் வட்டமேசை கூடிப் பேசித் தங்களுக்குள் சுமுகமாகத் தீர்த்துக் கொள்ள வேண்டிய இவ்விஷயத்தை உண்ணாவிரதங்களால் தீர்க்க முடியாது. 'பஞ்சாபி சுபா' கிடைப்பதாகவே வைத்துக் கொள்வோம். இதை எதிர்ப்பவர்கள், உண்ணாவிரதமிருந்தால், மாஸ்டர் தாராசிங் பின்னர் அதை எப்படிச் சமாளிப்பார். எல்லைப்புறத்திலுள்ள அம்மாகாணத்திலே இதனல் வகுப்புவாதம் அதிகரித்துள்ளதால் பாதுகாப்புக்கும் ஆபத்தாகும். பிரதேசக் கமிட்டிகள் அமைத்து, அவற்றுக்கு அதிக அதிகாரம் கொடுக்கலாமென்றும், நேருஜி சமரசமாக ஒரு யோசனை கூறியதாகத் தெரிகிறது. அந்த முறையில் சமசமாக இப்பிரச்சினையைத் தீர்க்க வேண்டும். அப்படியின்றி வயோதிபரான தாராசிங்கின் உயிரை அகாலிகள் பலி கொடுத்து, 'பஞ்சாபி சுபா' பெறலாமென்று இருப்பின் வகுப்புக் கலவரங்கள் ஏற்பட்டு, நாட்டுக்கே பெரும் தீங்கு ஏற்படுவதாக இருக்கும்.

# கே. எம். பி. ராஜரத்ன எம். பி. பதவியை இழந்தார்?

## இரு ஸ்தானங்கள் காலி — சட்டம் ஒரு கழுதை —தடுப்புக்காவல் கைதிகள்படிப்படியாக விடுதலை-- தமிழரசுக்கட்சி எம். பி.க்கள்— அவசரகாலச் சட்டம் எப்போது நீங்கும்? - ஸி. பி. டி' சில்வா தற்காலிக பிரதமர்

(நமது அரசியல் நிருபர்)

வெளிமடை எம். பி.யான கே. எம். பி. ராஜரத்னவை, 18 மாத கடுங்காவல் தண்டனையை அனுபவிக்க, வெளிக்கடை சிறைச்சாலைக்கு சென்ற புதன்கிழமை அனுப்பிவைத்தது சென்ற வாரத்தில் முக்கியமானதோர் அரசியல் சம்பவமாகும்.

வகுப்புக் கலவரம் நடந்த காலத்திலே வெளிமடையிலே, சட்டவிரோதமாகக் கூடி, கிரிகோரிஸ் பெரேரா என்பவரின் சென்டிரல் ஸ்டோர்ஸுக்கு நாசம் விளைவித்ததாயும் கடைச்சொந்தக்காரரை காயப்படுத்தியதாயும், கே. எம். பி. உள்ளிட்டு 9 பேர்களுக்கு பதுளை மாஜிஸ்டிரேட் 30மாதக கடுங்காவல் தண்டனை விதித்தார். எதிரிகள் சுப்ரீம் கோர்ட்டுக்கு அப்பீல் செய்துகொண்டதில் தண்டனை 18 மாத கடுங்காவலாகக் குறைக்கப்பட்டது.

இம் மாதம் 3ந் திகதி மற்ற எட்டு எதிரிகளும் பதுளை கோர்ட்டில் ஆஜர் செய்யப்பட்டுச் சிறைக்கு அனுப்பப்பட்டனர். பாதுகாவலில் வைக்கப்பட்டிருந்த வெளிமடை எம். பி. அச் சமயம் அங்கு கொண்டுவரப்படவில்லை. அவசரகால சட்டப்படி சில புதிய உத்தரவுகளைப் பிறப்பித்து, வேறு கோர்ட்டில் குற்றவாளிகளை ஆஜர் செய்யவும் அதிகாரம் பெற்று கே. எம். பி.யை, கொழும்பு மாஜிஸ்திரேட் மூலம் சிறைக்கு அனுப்பி வைத்தனர்.

மற்ற எதிரிகளுடன் வெளிமடை எம். பி. யையும் பதுளை கோர்ட்டில் ஆஜர் செய்யாமல் புதிய உத்தரவு பிறப்பித்து, கொழும்பு கோர்ட் மூலம் அவரை ஜெயிலுக்கு அனுப்பி வைக்க விசேஷ காரணம் இருக்க வேண்டும். பதுளையில் கிளர்ச்சிகள் ஏற்படலாமென்று கருதி, அதைத் தவிர்க்க அரசாங்கம் இவ்வித நடவடிக்கையை எடுத்திருக்கலாம்.

காரணம் எதுவாயினும், தீவிர வகுப்புவாதத் தலைவரான கே. எம். பி. ராஜரத்னவை, சிறைக்கு அனுப்பி வைத்தது ஒரு துணிச்சலான செயல். அவரை நீதி மந்திரி விடுதலை செய்ய சிபார்சு செய்வாரென்று உலவி வந்த வதந்திகள் இதுவரை பொய்த்துவிட்டன.

3 மாத காலத்துக்கு மேல் ஒருவருக்கு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டால், அவர் பார்லிமெண்ட் மெம்பர் ஸ்தானத்தை இழப்பதுடன், பின்னர் ஏழுவருட காலத்துக்கு அரசியல் உரிமைகளை இழப்பதுடன், பார்லிமெண்ட் தேர்தலுக்கு அபேட்சகராகவும் நிற்க முடியாதென்று, இலங்கையின் அரசியல் சட்டம் கூறுகிறது. இதன்படி கே. எம். பி. ராஜரத்ன இத் தண்டனையுடன், இலங்கை அரசியல் வாழ்விலிருந்து ஏழு வருட காலத்துக்கு விலக்கப்படுவார்.

இதற்கிடையே அவரை விடுதலை செய்ய வேண்டுமென்று பார்லிமெண்டில் அவிசாவளை மெம்பர் கேட்டுள்ளார். இடையிலே அவர் மன்னிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டாலும், கோர்ட்டார் அவருக்கு 18 மாத தண்டனை விதித்துள்ளதால் அவர் பார்லிமெண்ட் மெம்பர் பதவியை இழந்துவிட்டார். இப்போது அவர் எம். பி. அல்ல.

அரசியல் சட்டத்திலுள்ள இந்த விதியைத் திருத்தலாமென்றும், அரசியல் உரிமைகளை அவர் இழக்காமலிருக்கவும் முயற்சிகள் செய்யப்படலாமென்றும் வதந்திகள் உலவுகின்றன. ஆனல் இதற்கு அரசியல் சட்டத்தையே திருத்த வேண்டியிருக்கும். தங்களுக்கு சதா மண்டையிடி கொடுத்து வந்த ஓர் அரசியல் எதிரிக்காக அவ்விதம் சட்டத்தைத் திருத்தி, தங்களுக்கு அரசாங்கம் வீண் உபத்திரவத்தை விலைக்கு வாங்குமா என்பது சந்தேகமே.

ஃ ஃ ஃ

தடுப்புக்காவலில் சென்ற இரண்டு மாத காலத்துக்கு மேல் தமது கணவருடன் வைக்கப்பட்டிருந்த ஊவா பரணகமா எம். பி.யான ஸ்ரீமதி குஸுமா ராஜரத்ன சென்ற வெள்ளிக்கிழமை விடுதலை செய்யப்பெற்ருர்.

பார்லிமெண்ட் கட்டடத்தில் உண்ணாவிரதமிருந்த கே. எம். பி. ராஜரத்னவை தடுப்புக்காவலில் சென்ற ஜூன் மாதம் 17ந் திகதி வைத்த போது, அவரது மனைவியாரான குஸுமாவையும் அவருடன் காவலில் வைத்தனர். அவரை ஏன் காவலில் வைக்க வேண்டுமென்று பார்லிமெண்டில் கேட்டதற்கு, அவரது விருப்பத்துக்கிணங்கவே அவ்விதம் செய்ததாக மந்திரி பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா பதிலளித்தார்.

இது சுத்தப் பொய்யென்றும் தாம் அவ்விதம் கேட்கவே இல்லை என்றும் ஸ்ரீமதி குஸுமா பார்லிமெண்டில் மறுத்தும், அது தமது சொந்த அனுமானம் என்று மந்திரி சமாதானம் கூறினர்.

ஸ்ரீமதி குஸுமா தம்மைப் பற்றி பார்லிமெண்டில் பேசுகையில், "எனது கணவரைச் சிறைச்சாலைக்குக் கொண்டு சென்றதும், வீட்டைச் சுற்றி ஆண் பொலிசார் இருந்தனர். அவர்களை அகற்றிவிட்டு பெண்களை நியமிக்குமாறு பிரதம மந்திரிக்கு எழுதினேன். பின்னர் இரு பெண் பொலிசுகள் வந்து மிகவும் தொந்தரவு கொடுத்தனர். வீட்டுக்குள் தாராளமாக நடமாடும் சுதந்திரமும் எனக்கு இல்லை. எல்லாம் பிரதமரின் பார்லிமெண்ட் காரியதரிசியின் உத்தரவின் மீதுதான் நடந்துள்ளன. அவர் என்னை அவமதித்துவிட்டார்" என்ருர்.

ஸ்ரீமதி குஸுமா ராஜரத்னவின் சகோதரர் இது பற்றித் தம்மிடம் வந்து புகார் தெரிவித்ததும், தாம் அக்காவல் நீக்கப்பட்டுவிட்டதாகவும், உபத்திரவம் செய்யுமாறும் யாரும் உத்தரவிடவில்லையென்றும், உண்மையில், இவ்விஷயத்தில் தாம் செய்துள்ள உதவிகள் ஸ்ரீமதி குஸுமாவுக்குத் தெரியாதென்றும் கூறினர், நிதிமந்திரி. இதற்கு குஸுமா "நன்றி" என்று ஒரே வார்த்தையில் பதில் கொடுத்தார்.

ஃ ஃ ஃ

### இரு ஸ்தானங்கள் காலி

மூதூர் தொகுதிக்கும், வெளிமடைத் தொகுதிக்கும் இப்போது பார்லிமெண்ட் சபையில் பிரதிநிதிகள் இல்லை. மூதூர்ப் பிரதிநிதி ஏகாம்பரம் இறந்து 6 மாதங்களாகின்றன. காலியாகியுள்ளதென்று அறிவித்த ஒருமாத காலத்துக்குள்ளாக, இடைத் தேர்தல் நடத்த வேண்டுமென்பது அரசியல் சட்டம். இதுபற்றிப் பார்லிமெண்டில் கேள்வி எழுந்தது. இதற்கு நிதி மந்திரி அளித்த பதிலில், வகுப்புவாதக் கிளர்ச்சிகள் மீண்டும் தலைதூக்காதிருப்பதற்காகவே, அங்கு இடைத் தேர்தல் நடத்தாமலிருப்பதாகப் பதிலளித்தார்.

இப்போது வெளிமடைத் தொகுதி ஸ்தானமும், கே. எம். பி. சிறைப்பட்டதால் காலியாகியுள்ளது. அங்கும் இதே காரணமாக இடைத் தேர்தலை இப்போதைக்கு நடத்தாமல் ஒத்திவைப்பரென்றே கருதப்படுகின்றது.

கே. எம். பி.க்கு மன்னிப்பு கிடைக்குமாயின் அவா மீண்டும் அதே தொகுதி இடைத் தேர்தலில் போட்டியிடக்கூடுமென்றும், சட்டம் ஒரு கழுதையென்றும், உசிதப்படி அதற்கு வியாக்கியானம் செய்யப்படலாமென்றும், ஓர் அரசியல்வாதியை விசாரித்ததில் தெரிவித்தார்.

ஃ ஃ ஃ

### தமிழரசு எம். பி. க்கள்

வடக்கிலும், கிழக்கிலும் சத்தியாக்கிரகமோ பெரிய கிளர்ச்சிகளோ இல்லாததால் தடுப்புக்காவலிலுள்ள தமிழரசுக்காரர்களை விடுதலை செய்ய வேண்டுமென்று, அவிசாவளை மெம்பர் பிலிப் குணவர்த்தன மட்டுமன்றி அரசாங்கக் கட்சியைச் சேர்ந்த மிரிகமை மெம்பர் விஜயபாகு விஜயசிங்காவும் பார்லிமெண்டில் பொலிஸ் மானியம் பற்றி நடந்த விவாதத்தின் போது வற்புறுத்தினர். அரசாங்கக் கட்சியைச் சேர்ந்த ஒருவர், பார்லிமெண்டில் பகிரங்கமாக இவ்விதம் கேட்டுள்ளது, அரசாங்கக் கட்சிக்கு மனமாற்றம் ஏற்பட்டுவருவதற்கு ஓர் அறிகுறியாகவும் கொள்ளலாம்.

சென்ற வாரம் 8 பேரும், சென்ற சனிக்கிழமையன்று 5 பேர்களும் தடுப்புக் காவலிலிருந்து விடுதலை செய்யப்பட்டுள்ளனர். இதுவரை கோஷ்டி கோஷ்டியாகப் பலர் விடுதலையாகியுள்ளனர். என்ருலும் இன்னும் தமிழரசுக் கட்சி எம். பி.க்கள் யாரும் விடுதலை செய்யப்படவில்லை. இதுபற்றி, சபையில் மந்திரி ஒரு திட்டமான பதிலும் கூறவில்லை.

அவசரகாலச் சட்டம் நீக்கப்படவேண்டுமென்று பார்லிமெண்டில் கேட்கப்பட்டது. நாட்டில் சகஜநிலை ஏற்பட்டதும் அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்டுவிடுமென்று பாதுகாப்பு மந்திரியின் காரியதரிசி பதிலளித்தார். இப்பதிலைக் கேட்டு எதிர்க்கட்சி மெம்பர்கள் சிரித்ததும், "நீங்கள் கருதும் சாதாரண நிலைமையல்ல" என்ருர் மந்திரி.

எப்படியும் அவசரகாலச் சட்

(5ம் பக்கம் பார்க்க)

## ஐயாறன் எழுதுவது



பாரத அன்னை, தனது பிரதிநிதியான ஹைகமிஷனர் பி. கே. கபூரை, யாழ்ப்பாணத்துக்கு அனுப்பயிருக்கின்ருர். ஸ்ரீ கபூர் சென்ற பிப்ரவரி மாதமே இங்கு வந்திருக்க வேண்டியவர். இந்திய 'ஹாண்ட்லூம்ஸ்' திறப்பு விழாவில் பங்குபற்றுவதாக இருந்தது. ஆனல் அப்போது சத்தியாக்கிரகம் காரணமாக அவர் பிரயாணத்தை ஆறு மாதங்களுக்கு ஒத்திப் போட்டு இப்போதுதான் வருகிருர்.

இந்தியாவின் பிரதிநிதியான கபூருக்கு யாழ்ப்பாணம் நல்வரவு கூறுகின்றது. அவசரகாலம் இல்லாமலிருந்தால் அவருக்கு இங்கு மிக மேலான வரவேற்பு கிடைத்திருக்கும். அவ்வித நிலைமை ஏற்பட்டதும் அவர் மீண்டும் இங்கு வர வேண்டுமென்றும், யாழ்ப்பாண மக்கள் விரும்புகின்ருர்கள்.

* * *

கபூர் ஓர் இந்துதானு? என்று நண்பர் ஒருவர் கேட்கின்ருர். அவர் அசல் இந்து. சென்ற ஆண்டு கிருஷ்ண ஜயந்தியன்று தமது வீட்டில்விசேஷ பஜனை நடத்தியவர். கபூர் என்பது பிள்ளை, முதலியார் என்பதுபோல் டாஞ்சாலத்தில் ஒரு சாதிப் பெயராம்.

கபூரைப்பற்றி விசாரித்ததில், அவர் மிக நல்ல மனிதர். சாது என்று பலரும் தெரிவித்தனர். அவருக்கு வயது 52. இராணுவ அதிகாரியாக பயிற்சி பெற்று, இராணுவத்திலும், அரசியல் இலாகாவிலும் பல பொறுப்பான பதவிகள் வகித்தவர். கானவிலும், ஹாலந்திலும் இந்தியாவின் பிரதிநிதியாகத் தொண்டாற்றியவர்.

அவரது யாழ்ப்பாண விஜயத்தின் பயனக இங்கு இந்தியாவின் விஸா காரியாலயமும் வாசகசாலையும் ஏற்பட்டு, இரு பகுதி மக்களுக்கும் யாத்திரை தடைகள் நீங்கவும் கலாசார உறவுகள் மேம்படவும் வேண்டும்.

* * *

கொழும்பிலிருந்து ஓர் அன்பர் எழுதியுள்ள ஒரு கடிதத்தில் இங்கு பல கோவில் திருவிழாவுக்கும் நான் செல்லுவது குறித்து பொருமைப்படுவதாயும் எழுதுவதை ஆவலுடன் படிப்பதாகவும் கூறிவிட்டு, "நான் சமீபத்தில் முன்னேஸ்வரம் சென்றேன். வடிவாம்பிக்கையை கிட்டச் சென்று தரிசித்தேன். ஐயாறன் ஏன் வரவில்லை என்று கேட்டார். வடக்கே மற்ருெரு சக்தியான நாகேஸ்வரியை தரிசிக்கச் சென்றிருப்பதாகத் தெரிவித்தேன்..." என்று குறிப்பிடுகின்ருர். என்னைத் தியம் அவருக்கும் பிடித்துவிட்டதைக் காண மிக மகிழ்ச்சி!

நாகதுவீபத் திருவிழாவுக்குச் செல்ல வேண்டுமென்று எனக்கும் மிக விருப்பம். ஆனல் கைகூடவில்லை. அங்கிருந்து

(5ம் பக்கம்பார்க்க)

# லியப்போல்ட்வில்லி செல்ல ஷோம்பே மறுப்பு

## கடாங்கா துருப்புகள் நிராயுதபாணியாக்கப்படுகின்றன

லியப்போல்ட்வில்லி, ஆக 27

**காங்கோ பிரதமர் அடோலாவுடன் பேச்சுவார்த்தை நடாத்தும் பொருட்டு லியப்போல்ட்வில்லி செல்ல கடாங்கா ஜனதிபதி ஷோம்பே மறுத்துவிட்டார்.**

காங்கோவிலுள்ள ஐ. நா பிரதிநிதி, திரு. ஷோம்பேயைச் சந்தித்து பேச்சு வார்த்தை நடத்த வருமாறு கோரும் திரு. அடோலாவின் கடிதத்தைக் கொடுத்ததாயும், ஆனல் ஐ. நா. மிரட்டலுக்குப் பயந்து தாம் அங்கு செல்லப்போவதில்லையென ஷோம்பே தெரிவித்ததாயும் அறிவிக்கப்படுகிறது. ஆனல் பயமுறுத்தல் எதையும் விடுக்கவில்லையென ஐ. நா. அதிகாரி கூறினர்.

இதற்கிடையில், எலிஸபெத்வில்லியிலுள்ள ஐ. நா. துருப்புக்கள் பலப்படுத்தப்படுகின்றன. மேலும் பல இந்தியத் துருப்புக்கள் அங்கு அனுப்பப்பட்டிருக்கிருர்கள். இப்போது அங்கு 1300 இந்தியத் துருப்புக்கள் இருப்பதாய்த்தெரிவிக்கப்படுகிறது. கடாங்காவிலுள்ள 13000 ராணுவத்தினர், பொலிசார் ஆகியோரிடமிருந்து ஆயுதங்களை அகற்றும் முயற்சியில் ஐ நா. துருப்புக்கள் ஏற்கெனவே ஈடுபட்டுவிட்டதாய் அறிவிக்கப்படுகிறது. காங்கோ மத்திய அரசாங்கத்திலிருந்து பிரிந்து நிற்பதென்ற காடங்காவின் முடிவை முறியடிக்கும் முகமாக ஐ. நா. துருப்புக்களின் உதவியை திரு. அடோலா கோரியிருக்கிருர். காங்கோவை ஐக்கிப்படுத்தும் நடவடிக்கையை முன்னிட்டே திரு. அடோலா ஐ. நா. உதவியை நாடியிருக்கிருர்.

# அடுத்த ஐ. நா. இந்திய தூது கோஷ்டி

## திரு. கிருஷ்ணமேனன் தலைமையில் செல்லும்

புதுடில்லி, ஆக. 28

அடுத்த 19-ம் தேதி ஆரம்பமாகவிருக்கும் ஐ. நா. வின் 16 வது கூட்டத் தொடருக்குச் செல்லும் இந்தியத் தூது கோஷ்டிக்கு திரு. வி. கே. கிருஷ்ணமேனன் தலைமை வகிப்பார். கனடாவிலுள்ள இந்தியஹைகமிஷனர் திரு. சக்கரவர்த்தி, சென்னை தொழில் மந்திரி திரு. வெங்கட்ராமன், ஐ. நா. விலுள்ள நிரந்தரப் பிரதிநிதி திரு. ஸி எஸ். ஜா, சீனவிலிருந்த இந்தியத் தூதர் திரு. ஜி. பார்த்தசாரதி, திரு. என. ஸி. காட்கில்பால், திரு. ஹக்செளத்ரி, திரு. பட்டாபிராமன், திரு. கோஸ்லா, திரு. லொனி ஆகியோர் தூது கோஷ்டியின் இதர அங்கத்தினர்கள்.

# ஜெர்மனியுடன் சமாதான ஒப்பந்தத்துக்கு இணங்கினல்

## பெர்லினில் 4 வல்லரசு துருப்புக்களை நிறுத்தலாம்

### மேற்கு நாடுகளுக்கு குருஷ்சேவ் அறிவிப்பு

மாஸ்கோ, ஆக. 28

**ஜெர்மனியுடன் சமாதான ஒப்பந்தம் ஒன்றைச் செய்துகொள்ள மேற்கு நாடுகள் இணங்கினல், மேற்கு பெர்லினை ஒரு சுதந்திர நகராக்கி அங்கு 4 வல்லரசுகளின் துருப்புக்களையும் நிறுத்திவைக்கச் சம்மதிப்பதாய சோவியத் பிரதமர் திரு. குருஷ்சேவ் தெரிவித்திருக்கிருர்.**

திரு. குருஷ்சேவ் இந்தியப் பிரதமருக்குத் தனிப்பட்ட முறையில் கடிதம் ஒன்றை எழுதியிருப்பதாயும், இதில் சர்வதேசப் பிரச்சினை பற்றி மேற்கு நாடுகள் பேச்சுவார்த்தை நடத்துமாறு கேட்டிருக்கும் கோரிக்கைக்கு, அவர் இணக்கம் தெரிவித்திருப்பதாயும் அறிவிக்கப்படுகிறது.

இதற்கிடையில் ஜனதிபதி கென்னடி பிரெஞ்சு அதிபர் டிகாலுக்கு ஓர் கடிதத்தை எழுதியிருப்பதாயும், அதில் ரஷ்யாவுடன் பெர்லின்பற்றி ஐ. நா. மூலம் பேச வேண்டுமெனக் கோரியிருப்பதாயும் தெரிகிறது.



## உலக வலம்

### 793 லட்சம் டன் உணவு

சென்ற ஆண்டு இந்தியாவில் 793 லட்சம் டன் உணவு உற்பத்தி செய்யப்பட்டது.

### நாகர் தலைவர் இறுதிச் சடங்கு

காலஞ்சென்ற நாகந் தலைவர் டாக்டர் ஆவோவின் சடலம் கடந்த வெள்ளிக்கிழமை மரியாதையுடன் அடக்கம் செய்யப்பட்டது. சகல துறைகளையும் சேர்ந்த 8000 பேர் இறுதிச் சடங்கில் பங்குபற்றிக் கொண்டனர் ராஷ்டிரபதி, பிரதமர் சார்பில் பிரேதத்திற்கு மலர் வளையங்கள் வைக்கப்பட்டன.

### ரயில் பாதைக்கு 147 கோடி

3-ம் ஐந்தாண்டுத் திட்டத்தின் போது நாட்டில் புதிய ரயில்பாதைகள் அமைக்கும் பொருட்டு 147 கோடி ரூபாய் செலவிடப்படும் என அறிவிக்கப்பட்டது.

தென்னட்டில் 3 ரயில் பாதைகளும், ஒரிஸாவில் ஒரு பாதையும போடப்படும்.

### நஷ்டத்தில் பங்கு

3-ம் திட்டத்தின் போது மது விலக்கு காரணமாக ராஜ்யங்களுக்கு ஏற்படும் நஷ்டத்தைப் பகிர்ந்துகொள்வது என மத்திய அரசாங்கம வாக்குறுதி யளித்திருக்கிறது.

### அங்கீகாரம்

பர்மாவின் அரசாங்க மொழியாக புத்தமதத்தை ஏறபடுத்தும் மசோதாவை பர்மாவின் இரு சபைகளும் அடங்கிய கலப்புக் கூட்டம் அங்கீகரித்தது.

### இந்திராகாந்தி

நேருவின் புதல்வி ஸ்ரீமதி இந்திராகாந்தி நைரோபியிலிருந்து கனடாவுக்குப் புறப்பட்டிருக்கிருர். அங்கு அவர் 4 நாள் தங்குவார்.

### கென்யாட்டா

தாம் 4 வருடம் பண்ணைத் தொழிலாளியாக வேலைசெய்த இடத்திற்குச் சென்று வசிக்கப் போவதாய் கென்யா தலைவர் திரு. கென்யாட்டா கூறினர்.

**3 நிலக்கரிச் சுரங்கங்களை அமைக்க உதவும் பொருட்டு, பிரிட்டிஷ் தேசிய நிலக்கரி சபையைச் சேர்ந்த மூன்று அதிகாரிகள் சீக்கிரம் இந்தியா வரவிருக்கிருர்கள். அவர்கள் இடமிருந்து வலம் வருமாறு: திரு. ஜோஸப் எலியட், திரு. ஜி. ஆம்ஸ்ட்ராங், திரு. எச். ஈ. கொலின்ஸ்**

## கே. எம். பி. ராஜரத்ன...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

டத்தை சமீபத்தில் அகற்றுவதற்கான அறிகுறி எதுவும் காணப்படவில்லை.

பெல்கிரேட்டில் (யூகோ) கூடும் நடுநிலைமை நாடுகளின் உச்சி மகாநாட்டில் கலந்து கொள்ள பிரதமரும், அவரது பார்லிமெண்ட் காரியதரிசி பீலிக்ஸ் பண்டாரநாயக்காவும் இன்று புறப்படுகின்றனர். பிரதமர் இல்லாத காலத்தில், அவரது பொறுப்புகளை மந்திரி ஸி. பி. டி' சில்வா முன்போல் கவனித்துவருவார்.

வரவு செலவுத் திட்ட விவாதம் முடிந்தபின், சுமார் 20 எம் பி. க்கள், பல வெளி நாடுகளுக்கும் செல்லுகின்றுர்கள்.

**[இதை யெல்லாம் எழுதி முடித்ததும் கடைசியாக, கவர்னர்ஜெனரல் கே.எம்.பி.யின் தண்டனையை 2 மாதங்களுக்குக் குறைத்துவிட்டதாக தகவல் கிடைத்துள்ளது. இதனல் அவர் தமது ஸ்தானத்தையும் அரசியல் உரிமையையும் இழக்கமாட்டார். நீதி மந்திரி இவ்விதம் சிபார்சு செய்வாரென்று உலவிய வதந்திகள் இப்போது உண்மையாகிவிட்டன.]**

## ஐயாறன்

(4ம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று வந்த ஓர் அன்பர் அங்கு கடலில் தெப்பத் திருவிழா மிக விமரிசையாக நடந்ததாகத் தெரிவித்தார். பல வருடங்களுக்கு முன் ஒரு முறை அததீவுக்குச் சென்றுள்ளேன். என்ன இயற்கை எழில்! உள்ளம் மறக்கவே இல்லை.

* * *

ஒரு வேடிக்கை கதையைக் கேள்விப்பட்டேன். தடுப்புக்காவலிலிருந்து சென்ற வாரம் விடுதலையடைந்த கதிரவேற்பிள்ளையும், அட்வக்கேட் அம்பலவாணரும் இரட்டையர்கள். இருவரும் ஒரே அச்சில் வார்த்தது போலிருக்கும். பார்த்தால் வேற்றுமையே தெரியாது.

சில நாட்களுக்கு முன்பாக பிள்ளையவர்கள் தடுப்புக்காவலில் இருக்கையில் சகோதரர் அம்பலவாணர் அவரைப் பார்க்கச் சென்ருர். பேசிவிட்டு வெளியே வந்து அம்பலவாணர் காரில் ஏறுகையில், அங்கிருந்த காவல் அதிகாரி அவரைத் தடுத்து "தப்பி ஓடப் பார்க்கிறீரா!" என்று கேட்டதும், அவர் சிரித்துவிட்டார். பின்னர் உண்மை அறிந்த காவல் அதிகாரியும் சேர்ந்து சிரித்தாராம்!

* * *

கல்வி மந்திரி யாழ்ப்பாணம் வந்திருக்கையில் இங்கு மக்கள் தமிழில் பேசுவதால் தாமும் தமிழில் பேசுவதாகச் சொல்லி தமிழிலேயே பேசினராம். பிரதமர் உள்ளிட்டு எல்லா மந்திரிகளும் வடக்கு கிழக்கு மாகாணமக்களின் உணர்ச்சியை மதித்து தமிழ் கற்று இவ்விதமே பேசினல் தப்பெண்ணங்கள் நீங்கி, இரு சமூகங்களிடையிலும் நல்லுறவு வெகு சீக்கிரத்தில ஏற்படலாமல்லவா?

* * *

பிரதமர் இன்று தீவைவிட்டு பரதேசம் செல்லுகிருர். அதற்குமுன் சென்ற சனிக்கிழமை கதிர்காமத்துக்குச் சென்று முருகனை வணங்கி வந்தாராம். தீவில் தாம் இல்லாத காலத்தில் இங்கு எல்லாம் அமைதியாக இருக்க வேண்டுமென்றும தாம பத்திரமாக திரும்ப உதவ வேண்டுமென்றும் கேட்டிருக்கலாம். கதிரமலைக்கும் அவர் சென்று அங்கு ஒரு புதிய புத்தர் கோவிலைத் திறந்து வைத்துள்ளார்.

அங்கு எல்லாம் பௌத்தமயமாகச் செய்ய முயற்சி நடப்பதாக ஓர் அன்பர் அஞ்சுகிருர். முருகனுக்கு இதெல்லாம் தெரியாதா! அவனன்றி ஓரணுவும் அசையுமா? எதற்கும் ஏன் அஞ்ச வேண்டும்!

## இ. போ. ச. விபத்துக்கள் அதிகரிப்பு

கொழும்பு, திங்கள்

இலங்கை போக்குவரத்துச் சபையின் பஸ் விபத்துக்கள் 1958 ம் ஆண்டு முதல் அதிகரித்து வந்திருக்கின்றன என சபை அதிகாரிகளால் தயாரிக்கப்பட்ட புள்ளி விபரங்கள் கூறுகின்றன.

1958 ம் ஆண்டு 2499 விபத்துக்கள் ஏற்பட்டன. 1959 ம் ஆண்டு ஏற்பட்ட விபத்துக்கள் 3495 ஆகும். 1660 ம் ஆண்டு 3996 விபத்துக்களும், இவ்வாண்டு மே 31 ம் தேதியுடன் 1770 விபத்துக்களும் ஏற்பட்டதாக அறிவிக்கப்படுகின்றது.

## மலைநாட்டில் விவேகானந்த சபையின் சமயப் பிரசாரம்

போகவந்தலாவை, திங்கள்

போகவந்தலாவை ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி கோவில் மண்டபத்தில் சென்ற சனிக்கிழமை மாலை கொழும்பு விவேகானந்த சபையாரின் சைவமயப் பிரசாரம் நடைபெற்றது. பூசை முடிந்ததும் மண்டபத்தில் கூட்டுப் பிரார்த்தனை நடைபெற்றது. பிரார்த்தனையைத் தொடர்ந்து சபை அங்கத்தவர் ஒருவர் கடவுள் வழிபாட்டின் அவசியத்தையும், கூட்டுப் பிரார்த்தனையால் சாதிக்கக்கூடியவற்றையும் விளக்கினர்.

கிராமம் கிராமமாகத் தொண்டர்களை அனுப்பி சைவசமயப் பிரசாரம் செய்வதென்று கொழும்பு விவேகானந்த சபை செய்த முடிவை அவர் குறிப்பிட்டு மலைநாட்டில் வாழும் சகோதரர்களிடையே சைவ சமய அறிவை வளர்க்கச் சபை முன்வந்துள்ளதென்றும் அவர் தெரிவித்தார். அதன் பின்னர் பக்கவாத்திய சகிதம் பக்திப் பாடல்கள் பாடப்பட்டன. போகந்தலாவைப் பிரமுகர் ஸ்ரீ கனகசிவம் அனைவருக்கும் நன்றி கூறினர்.


## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. M B 3695

ஆறுமுகம் தம்பையா சங்கானை மேற்கு வழக்காளி. எதிராக பொன்னையா அப்பாதம்பி கைம்பெண் மாணிக்கம் சுளிபுரம் கிழக்கு காலம் சென்ற பென்னையா அப்பாதம்பியின் ஆதனத்தின் சட்ட பூர்வ பிரதிநிதி எதிராளி.

யாழ்ப்பாணம்டிஸ்றிக் கோட்டின் M B 3695-ம்இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி,பின்னல்விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி 1961-ம் ௵ புரட்டாதி ௴ 23-ந் ௳ சனிககிழமை முற்பகல் 10 மணிதொடக்கம் அந்தக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

**தீர்வைத் தொகை:-** முதல் வட்டி ரூபாய் 2059 ௳ 22-7-60 தொடக்கம் 6-3-61 வரைக்கும் ரூபாய் 1250க்கு 6% வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5% வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 295-34.

**ஆதன விபரம்**

வட மாகாணம் யாழ்ப்பாணம் வலிகாமம் மேற்கு சங்கானை கோவில்பற்று சுளிபுரம் கஞ்சம்பத்தையும் வசந்த நரிப்புல்லு நில பரப்பு (5) வீடு, கிணறு, செய்பயிர், வான் பயிர்கள். எல்லை கிழக்கும் வடக்கும் ஒழுங்கை. மேற்கு - சரவணமுத்து பெண் மாணிக்கத்துக்குரிய ஆதனம். தெற்கு - இளையதம்பி வைத்திலிங்கத்துக்கும் பெண் நாசகத்துக்குமுரிய ஆதனம் இதன் அடங்கலும்.

பதிவு E 204/178

ஆ. ச. இராசேந்திரம்
கொமிஷனர் அன் விலை மதிப்பாளர்

## முதியவர் வழக்கில் இளைஞர் இருவர்

### எச்சரிக்கைசெய்து விடுதலை

மாவிட்டபுரம், திங்கள்

"இவ் வழக்கில் வழக்காளியாயுள்ளவர் முதியவர். ஆனல் எதிரிகளாகிய நீங்கள் இருவரும் இளைஞர்கள். நீங்கள் சட்டத்தை உங்கள் கையில் எடுத்துக்கொள்ள முடியாது. வயது முதிர்ந்தவர்களின் வழிகளில் நீங்கள் குறுக்கே நிற்கக் கூடாது. நீங்கள் உங்களுக்கு விரும்பிய சங்கங்களையும் கழகங்களையும் அமைத்துக் கொள்ளலாம். வழக்காளியை இனிமேல் ஒன்றும் செய்யமாட்டீர்கள் என நீங்கள் வாக்குறுதியளிப்பதனுல்தான் நான் உங்கள் இருவரையும் விடுதலை செய்கிறேன்"

பெரிய விழானைச் சேர்ந்த வைத்தியன் பிலிப் என்பவரைத் தாக்கிக் காயம் உண்டு பண்ணியதாக அதேயூரைச் சேர்ந்த உலகேசு கைப்பாறு, தமியான் கைதான் ஆகிய இருவர் மீதும் குற்றம்சாட்டி மல்லாகம் நீதிபதி முன்னிலையில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் தீர்ப்புக் கூறுகையில் இரு எதிரிகளையும் பார்த்து நீதிபதி மேற்கண்டவாறு கூறினர்.

இரு எதிரிகளும் தமது குற்றத்தை ஒப்புக்கொண்டு வழக்காளிக்கு இனிமேல் ஒரு தொந்தரவும் செய்யமாட்டோம் என வாக்குறுதியளித்த படியால் இருவரையும் நீதிபதி விடுதலை செய்தார்.

## வேலணையில் பாரதி விழா

வேலணை, திங்கள்

வேலணை இலக்கிய மறுமலர்ச்சி மன்றப் பொதுக் கூட்டம் திரு. இரா. சிவநாதன் தலைமையில் நடைபெற்றபோது பாரதிநினைவுதினத்தை கொண்டாடுவதென முடிவு செய்யப்பட்டது.


## ஏஜண்டுகள் தேவை

ஈழநாடு தினசரிப் பத்திரிகை விற்பனை செய்வதற்கு அடியில் கண்ட இடங்களுக்கு முன்பணம் கட்டக்கூடிய ஏஜண்டுகள் தேவை.

| | |
|---|---|
| ராகலை | ரத்தட்டை |
| பதியப்பெலே | வத்துகாமம் |
| பத்தனை | கட்டுகாஸ்தோட்ட |
| கடுகஞ்சேனை | மாவத்தகம |
| டைகாமம் | குருணைகலை |
| அக்ரப்பத்தனை | பண்டாரவளை |
| தலவாக்கெலே | வெலிமடை |
| ரம்படை | ஹப்புத்தல |
| பூண்டுலோயா | கொசலாந்தை |
| வட்டகொடை | ஹாலிஎல |
| மாத்தளை | கந்தகெதர |

விபரங்களுக்கு:

**ஜெகஜோதி அன் கோ.,**
14, திருக்கோணமலை வீதி, கண்டி.



# கட்டிட சாமான்கள்

கை மார்க் சிமிந்தி
அசானே ,,
டால்மியா ,,
எச் அயண், ஆங்கிலயண்
பிளாட்டயண், டீ அயண்
கல்வனேஸ் கூரைத் தகடுகள்
அலுமினியம் ,, ,,
அஸ்பெஸ்டாஸ் ,, ,,
ராணி மார்க் கூரை ஓடுகள்
மஹாராணி மார்க் ,, ,,
இரும்புத் தகடுகள்
கல்வனேஸ் பைப்

மிகவும் சகாயமான விலைகளில் கிடைக்குமிடம்

**செட்டிநாட்**
**காப்பரேஷன்(பிரைவேட்) லிமிட்டெட்**
116, 118, கெய்சர் வீதி,
கொழும்பு.


# இலங்கை வரும் போதனையந்திரங்கள்

## மாணவர்களுக்கு இனிப்பு பண்டங்களை வழங்குமாம்?

கொழும்பு, திங்கள்

**ரஷ்யாவிலும் அமெரிக்காவிலும் உபயோகிக்கப்படும் போதனை இயந்திரங்களை, இலங்கையிலும் உபயோகிக்கும்பொருட்டு, கல்வி இலாகா இங்கு அவற்றைத் தருவிக்கவிருக்கிறது**

இவ்வித இயந்திரங்கள் முதலில் தொழில் நுட்ட பிரிவினுல் சோதனையிடப்படும். அமுக்கும் பொத்தான்களைக்கொண்ட இந்த இயந்திரங்கள் கேள்விகளையும், பதில்களையும் தெரிவிக்கும்

திரை ஒன்றில் கேள்வி தோன்றியவுடன், மாணவன் ஒரு பொத்தானை அமுக்கவேண்டும். அப்போது அதற்கு விடை இயந்திரத்தின்மூலம் வெளியாகும். மாணவனின் விடை தவருனல், மீண்டும் முயற்சி செய்து பார்க்கும்படி இயந்திரம் தெரிவிக்கும்.

விடை சரியாக இருந்தால், மாணவனுக்கு இனிப்புப் பண்டங்களையும்கூட அது வழங்கும்.

## பாவற்குளத்தில் உடுப்பிட்டி எம். பி.

உடுப்பிட்டி, திங்கள்

பாவற்குளப் பகுதியில் அரசாங்க நிலத்திலிருந்து பல குடும்பங்கள் வெளியேற்றப்படுவதாகத் தகவல் கிடைத்து அங்கு சென்ற உடுப்பிட்டி எம். பி. திரு. எம். சிவசிதம்பரம், பாதிக்கப்பட்ட மக்களுடன் கலந்து, அவர்களின் நிலைமையை அரசாங்க அதிபருடன் பேசுவதாகவும், பார்லிமெண்டில் இவர்களது பிரச்சினையை எழுப்புவதாகவும் வாக்குறுதியளித்தார்.

## 'பயிர் செய்வோருக்கு நிலம் சொந்தமாக வேண்டும்'

### மாணவர்மன்ற பரிசளிப்பு விழாவில் பேச்சு

மாவிட்டபுரம், திங்கள்

"தமிழ் மக்கள் மத்தியில் விவசாயத் தொழில் செய்து வாழும் பிரிவினரே பெரும் பகுதியினர் எனினும் இவர்களுக்கு குடியிருப்பதற்கோ, பயிர் செய்யவோ சொந்த நிலம் இல்லை. பயிர் செய்வோருக்கு நிலம் சொந்தமாக வேண்டும். நெற்காணிமசோதா போன்ற முற்போக்குச் சட்டங்களைக் கண்டு அஞ்சும் நில உரிமையாளர் சிலர் குடியிருப்போரை இடம் பெயர்த்து இன்னல்படுத்துகின்றனர். இவற்றிற்கு முடிவு காணும் வகையில் அரசாங்கம் நெற்காணி மசோதாவை அமுல் நடத்த வேண்டும்." இவ்வாறு கலட்டி பொன். கந்தையா மாணவர்மன்ற பரிசளிப்புவிழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட அகில இலங்கைச் சிறுபான்மைத் தமிழர் மகாசபைத் தலைவர் திரு. எம். சி. சுப்பிரமணியம் தமது பேச்சிற் குறிப்பிட்டார்.

திரு. வ. பொன்னம்பலம் பேசியதாவது: இலங்கையின் வரலாற்றிலே வளர்க்கப்பட்ட வரவுசெலவுத் திட்டங்களில் மூன்றில் ஒரு பகுதி செல்வத்தைத் தேசிய அபிவிருத்திக்கென ஒதுக்கியுள்ள முதல் திட்டம் இதுவே. எனினும் பொது மக்களின் அத்தியாவசியப் பொருள்களின் விலையை ஏறச் செய்து கொள்ளை இலாபம் அடிக்க முற்பட்டுள்ள வர்த்தகர்களின் கொடுமையை ஒழித்துக்கட்ட அரசாங்கம் முன்வர வேண்டும்.

## "கணக்கப்பிள்ளைமாருக்கு தொழிலாளர் ஆதரவு வேண்டும்"

### 13வது வருடாந்த மகாநாட்டில் பேச்சு

பதுளை, வெள்ளி

"மலைநாட்டில் இயங்கும் தொழிற்சங்கங்களுக்கும் கணக்கப் பிள்ளைமார் சங்கத்திற்கும் நெருங்கியதொடர்பு ஏற்படுத்தவேண்டியது அவசியமாகும். அவ்வாறு நெருங்கியதொடர்பு ஏற்படுமானல் இருசாராருக்குமிடையே ஏற்படும் தப்பபிப்பிராயங்கள் மறைவதற்கு ஏதுவாக இருக்கும்."

இவ்வாறு லங்கா தோட்டத் தொழிலாளர் யூனியனின் பொதுக் காரியதரிசி திரு. எஸ் செல்லையா தோட்டக்கணக்கப் பிள்ளை யூனியன் 13 வது வருடாந்த மகாநாட்டில் பேசுகையில் கூறினர்.

அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

"மலைநாட்டுத் தொழிற்சங்கங்கள் தோன்றுவதற்கு முன் தொழிலாளர்களை கணக்கப் பிள்ளைமார் நடத்தியதைப் போன்று இன்று நடத்த முடியாதென்பதை ஒவ்வொரு தோட்ட சிப்பந்திகளும் உணருதல் முக்கியம்.

இன்று தோட்டத்தொழிலாளர்களிடையே தொழிற்சங்க உணர்ச்சி ஓங்கி வளர்ந்துள்ளது. தங்களுடைய உழைப்பினுல்தான் தோட்டங்கள் நடைபெறுகிறதென்பதை தொழிலாளர் உணர்ந்துவிட்டனர். ஆகவே அவர்களை சீரியமுறையில் நடத்திச் செல்ல தோட்ட உத்தியோகஸ்தர்கள் முயல வேண்டும்.

தோட்ட உத்தியோகஸ்தர்களுக்கிடையே தோட்ட சிப்பந்திகளுக்கென ஒரு சங்கமும் கணக்கப்பிள்ளைகளுக்கென ஒரு சங்கமும் அமைப்பதில் அர்த்தமே இல்லை. ஏனெனில் இரு சாராருக்குமிடையே சேவையைப் பொறுத்தவரையில் வித்தியாசமே கிடையாது. ஆனல் ஒன்று மட்டும் உண்டு. சேவையில் வித்தியாசமில்லாதிருந்தும் அவர்கள் சம்பளத்தில் நிரம்பவித்தியாசம் இருக்கிறது. அந்தப் பாரபட்சம் அவசியம் மறையவேண்டும்.

இன்றுள்ள நிலைமையில் கணக்கப்பிள்ளைகள் தோட்டத்துரை ஆதரவை மட்டும் நாடினுல் போதாது. தொழிலாளர்களின் ஆதரவு முக்கியமென்பதை அவர்கள் உணரவேண்டும். அப்போதுதான் இரு சாராருக்குமுள்ள தொடர்பைக் கொண்டு அவர்கள் நிர்வாகத்தைத் தொடர்ந்து நடத்தமுடியும்.

இயந்திரத் தொழில் முன்னேற்றமடைந்துள்ள மேல் நாடுகளில் ஒரு தொழிலுக்கு ஒரே சங்கம் வளர்ச்சியுற்றிருக்கிறது. ஆனல் இலங்கையில் ஒரு தொழிலுக்குப் பல சங்கங்கள் தோன்றியுள்ளன."

## திருடியவருக்கு 2 வருடச் சிறை

மன்னர், வெள்ளி

மடுக் கோவிலில் பிரயாணப் பையையும் அதிலுள்ள துணிமணிகளையும் கைக்கடிகாரத்தையும் தயபால என்பவர் களவெடுத்ததன் விளைவாக மன்னர் நீதிபதி திரு. ரி. ஜே. இராசரத்தினத்தின் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டார். எதிரி குற்றவாளியெனக்கண்டு இரண்டு வருடச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.


## மலைநாட்டில் ஈழநாடு ஏஜண்டுகள்

**கண்டி**
முஸ்லிம் ஹோட்டல், கண்டி.
செல்வன் கபே, கட்டுக்கலை, கண்டி.
விமலா ஸ்டோர்ஸ், கொழும்பு வீதி, கண்டி.
ஜெகஜோதி அன் கோ., கண்டி

**கம்பளை**
ஏ. எஸ். கனகரட்ணம், 3|5, நுவரெலியா ரோடு, கம்பளை.
எஸ். பி. செல்லமுத்துப் பிள்ளை, கம்பளை.

**உலப்பனை**
தனலெட்சுமி ஸ்டோர்ஸ், மாவத்துர.
லெட்சுமி ஸ்டோர்ஸ், மாவத்துர.

**நாவலப்பிட்டிய**
எஸ். ஞானப்பிரகாசம் முருகேசப்பிள்ளை அன் சன்ஸ், நாவலப்பிட்டிய.

**கினிகத்தென**
எம். சின்னத்துரை, கினிகத்தென.

**வட்டவளை**
பி. எஸ். ஏ. முத்தரசு சேர்வை, வட்டவளை.

**நோர்ட்டன்**
ஏ. பிச்சையாபிள்ளை, நியூஸ் ஏஜண்ட், நோர்ட்டன்பிரிஜ்.

**கங்குவத்தை**
ஸ்ரீ முருகன் ஸ்டோர்ஸ், கங்குவத்தை.

**மஸ்கெலியா**
நைன்சா ஸ்டோர்ஸ், மஸ்கெலியா.
சென்ட்ரல் மெடிக்கல் ஸ்டோர்ஸ், மஸ்கெலியா.

**நோர்வுட்**
ஸ்ரீ முருகன் ஸ்டோர்ஸ், நோர்வுட்.

**டிக்ஓயா**
ஏ. நடேசபிள்ளை, மருந்துக்கடை, மெயின் வீதி, டிக்ஓயா.

**ஹட்டன்**
ஸ்ரீ ரஞ்சனி ஸ்டோர்ஸ், ஒட்ரி எஸ்டேட்.
இம்பீரியல் பிரஸ், ஹட்டன்.
கே. எம். கறுப்பையா, ரோக்வுட் தோட்டம்.

**புசல்லாவ**
எம். ஏ. செல்லமுத்து, செல்வம் ஸ்டோர்ஸ், புசல்லாவ.

**நுவரெலியா**
எஸ். விருத்தாசலம், நியூவிக்டோரியா ஹவுஸ், ரீகல் பில்டிங், நுவரெலியா.

**பதுளை**
ஜானஹிராம் கம்பனி, 122, லோவர் வீதி, பதுளை.

**தெல்தெனி**
ஸ்ரீ லங்கா ஸ்டோர்ஸ், தெல்தெனியா.

**ரங்கலை**
பி. எம். சேகு மொஹமட், டக்குவாரி பஜார், ரங்கலை.

**ஏவாடெட்**
கணேசன் ஸ்டோர்ஸ், ஏவாடெட்.

**தெல்தொட்ட**
சண்முகநாதன் ஸ்டோர்ஸ், தெல்தொட்ட.

## முதலுதவி அவசியம் பற்றி மரணவிசாரணை அதிகாரி

யாழ்ப்பாணம், திங்கள்

"பாடசாலைகளில் மாத்திரமன்றி சனசமுக நிலையங்கள் கிராமமுன்னேற்றச் சங்கங்கள் ஆகியவற்றின் மூலமாகவும் சாதாரண மக்களுக்கும் முதலுதவிச் சிகிச்சை முறைகள் பயிற்றப்பட வேண்டியது மிக அவசியம். பொது ஸ்தாபனங்கள் இத்துறையில் உழைத்து வந்தால் இத்துக்ககரமான சம்பவம் நடக்காதவாறு ஒரு உயிரைக் காப்பாற்றிருக்கலாம்"

இவ்வாறு சடந்த சனிக்கிழமை புத்தூர் கிழக்கைச் சேர்ந்த சாணையன் வேலுப்பிள்ளை என்ற பதினொருவயதுச் சிறுவனின் மரணம் குறித்து விசாரணை நடத்திய திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. எஸ். கனகரத்தினம் குறிப்பிட்டார்.

இறந்தவரின் தகப்பனுரான பூதன் சாணையனும், முருகன் வல்லியும் சாட்சியமளித்தனர்.

முருகன் வல்லி சாட்சியமளிக்கையில் முதலுதவி அளிக்சத் தனக்குத் தெரியாதென்றும், அப்படிச் செய்திருந்தால் அச்சிறுவனைக் காப்பாற்றியிருக்கலாமெனவும் கூறினுர். அப்போது தான் திடீர் மரண விசாரணை அதிகாரி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

விபத்தினுல் ஏற்பட்ட மரணமெனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

## இலங்கை வரும் ஜாப். தூது கோஷ்டி

கொழும்பு, திங்கள்

5 பேரடங்கிய ஜப்பானிய ஒலிபரப்பு கூட்டு ஸ்தாபனத் தூது கோஷ்டி ஒன்று இவ்வாண்டு பிற்பகுதியில் இலங்கைக்கு வரவிருக்கிறது.

## தொழிலாளர்கள் வேலைக்குத் திரும்பினர்

மத்துகம, திங்கள்

பதுறலியா பகுதியைச் சேர்ந்த பதுறகலை தோட்டத்திலுள்ள 160க்கு மேற்பட்ட தொழிலாளர்கள், 21-ந் திகதி முதல் கிழமைதாறும் தங்களுக்குக் கிடைத்துவந்த கிழமை அட்வான்ஸ் கொடுப்பதைத் தோட்ட நிர்வாகம் நிறுத்தியதால் வேலைக்குப் போகவில்லை. 26-ந் திகதி மத்துகம வட்டார தொழிலதிபர் காரியாலயத்தில் நடத்திய பேச்சுவார்த்தையில் அட்வான்ஸ் கொடுக்க ஒப்புக்கொண்டபடியால் இவர்கள் வேலை திரும்புவதெென தீர்மானிக்கப்பட்டது.

# பார்லிமெண்டின் அடுத்த கூட்டம்

## சீதன ஒழிப்பு மசோதா கொண்டுவரப்படும்

கொழும்பு, ஞாயிறு

சீதனம் கேட்பதையும், கொடுப்பதையும் பெற்றுக் கொள்ளுவதையும் இல்லாமற் செய்வதற்குச் சட்டம் உருவாக்கவேண்டும் என்று யட்டிநுவரை எம். பி. திரு யு. பி. வீரசேகரா கருதுகிறுர்.

இம் மசோதாவை பிரதிநிதிகள் சபையில் சமர்ப்பிப்பதற்கு திரு. வீரசேகரா எம். பி. க்களின் ஆதரவைக்கோரி வருகிறுர். பார்லிமெண்ட் அடுத்தபடியாகக் கூடும்போது சீதன மசோதா சமர்ப்பிக்கப்படவிருக்கிறது.

திரு. வீரசேகரா அரசாங்க எம். பி. க்களுக்கு இந்திய 'லோக்' சபையில் நிறைவேற்றப்பட்டசட்டத்தின் பிரதிகளை வழங்கியுள்ளார். தமது தீர்மானத்தை அரசாங்க பார்லிமெண்டரி சார்பினர் ஏற்றுக் கொள்வரெனத்தான் நம்புவதாகக் கூறியுள்ளார். இதுபற்றித் தாம் பேசிய எம். பி. க்களெல்லாரும் மசோதாவிற்கு ஆதரவளிப்பதாகக் கூறியுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இந்திய சீதனச் சட்டம் இங்கு இச்சட்டத்தை நிறுவுவதற்கு உதவியாக இருக்கும் என அவர் கூறியுள்ளார்.

## உறவினர்போல் நடித்து திருடினராம்

மத்துகம, திங்கள்

அகலவத்தை டார்ட்டன் பீல்ட் தோட்டத்தில் தோம்சன் என்பவர் வீட்டில், அவர் வேலைக்குப் போன சமயத்தில் நாகரிக உடையணிந்த செல்லத்துரை என்பவர் வந்து அவர் மனைவியிடம் 50 ரூபாய் நோட்டைக் கொடுத்துச் சில்லறை கேட்டார். அவர் இல்லையெனக் கூறி வேறு இடத்தில் மாற்றிவரப்போன நேரத்தில் அவர்களின் இரு கைக்கடிகாரங்களையும், 50 ரூபாய் பணத்தையும் எடுத்துக்கொண்டார். அவர் திரும்பிவந்தவுடன் மாற்றக் கொடுத்த 50 ரூபாயையும் வாங்கிக்கொண்டு போய் விட்டாராம்.

இதே தினத்தில் சென். ஜோர்ஜ் தோட்டத்தில் ஒருவர் வீட்டிலும் சிறு பிள்ளைகளைக் கடைக்கு அனுப்பிவிட்டு தங்கநகைகளைக் களவாடிப் போயிருக்கிறுர்.

இக் களவுசம்பந்தமாக மத்துகம பொலிசில் புகார்பண்ணப்பட்டுள்ளது.

## வானொலி நிகழ்ச்சிகள்

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

**செவ்வாய் 29-8-61**

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-15 தேர்ந்தஇசை, 7-30 திரைஇசை, 8-00 வயலின், 8-15 இஸ்லாமியகீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 வளரும் பயிர், 5-45 திரைஇசை, 6-15 கிராமசஞ்சிகை, 6-45 புல்லாங்குழல்.

இரவு 7-00 பாட்டு, 7-30 நேயர்விருப்பம், 8-00 இஸ்லாமியநிகழ்ச்சி, 9-15 இசைச்சித்திரம், 10-00 நாகஸ்வரம்.

### திருச்சி

(செயதிகள்: காலை 7-15 பகல் 2, இரவு 7-15)

காலை 6-45 மங்களஇசை, 6-50 துதிப்பாடல்கள், 7-00 வாத்தியஇசை, 7-10 நிகழ்ச்சிக்குறிப்புகள், 7-30 பழமானேரி எஸ். நடராஜன்-பாட்டு.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 12-10 நடுத்தரப்பள்ளிகளுக்கு, 1-00 கதம்பம், 1-50 வாத்தியஇசை, 2-10 உயர்தரப்பள்ளிகளுக்கு.

மாலை 4-45 விவிதபாரதி (கர்நாடகசங்கீதம்), 5-45 இசைப் பயிற்சி, 6-15 கிராம நிகழ்ச்சிகள்.

இரவு 7-30 புதியன புகுதல்-சொல்: சென்னை அஞ்சல், 7-45 லலிதா சேஷாத்திரி-பாட்டு, 9-15 'மனமும் மழலையும்' - நாடகம், 9-30 மெல்லிசை, 9-50 கல்வெட்டுக்கல்வி

# இருபக்கமும் இடி!

## கள்ளக்கடத்தலில் வேறு குற்றச்சாட்டு

## நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல்?

யாழ்ப்பாணம், திங்கள்

இந்தியாவிலிருந்து கள்ளத்தனமாகப் பொருள்களைக் கடத்தி வந்த குற்றத்துக்காக ரூ. 2000 அபராதத் தொகையைச் செலுத்தி சுங்கஇலாகாவிடமிருந்து விடுதலை பெற்ற இருவர் பொலிசாரின் குற்றச்சாட்டுக்கு இலக்காகியுள்ளனர் எனத் தெரிகிறது.

கள்ளக் கடத்தலில் ஈடுபட்ட குற்றத்துக்காக வல்வெட்டித் துறையைச் சேர்ந்த என். குணரத்தினம் வண்ணர்பண்ணையைச் சேர்ந்த எஸ். முத்தையா ஆகிய இருவரும் ரூ. 2000 சுங்க இலாகாவுக்கு அபராதமாகச் செலுத்தியிருந்தனர்.

இச்சம்பவத்தோடு சம்பந்தப்பட்ட வேறு குற்றங்களுக்காக இவர்கள் இருவரையும் காங்கேசன்துறைப் பொலிசார் கைது செய்திருக்கின்றனர். என். குணரத்தினம் என்பவர் ரூ. 1000 பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார். எஸ்.முத்தையா ரிமாண்டிலேயே வைக்கப் பட்டுள்ளார்.

சட்டவிரோதமாக இலங்கை வந்தவராயிருக்கலாம் என்ற சந்தேகத்தின் மீது முத்தையா ரிமாண்டில் வைக்கப் பட்டுள்ளார். இது பற்றிப் பொலிசார் மேற்கொண்டு புலன் விசாரணை நடத்தி வருகின்றனர்.

குணரத்தினம் சட்டவிரோதமாக இந்தியாவுக்குச் சென்ற குற்றச்சாட்டின் பேரிலும், கள்ளத்தோணிக்கு உடந்தையாக இருந்திருக்கிறுர் என்ற சந்தேகத்தின் மீதும் கைதுசெய்யப்பட்டு பிணையில் விடப்பட்டுள்ளார்.

பொலிசார் விசாரணை முடிவடைந்ததும் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்படுமென சொல்லப்படுகிறது.


அழகிய பெனியன்! காலமேஸ்!!

"லேடன்" தயாரிப்பு

Leyden L.I.L

யாழ்ப்பாணத்தில் உற்பத்தியாகின்றது

பல தினுசுகள்! பல அளவுகள்!!

எங்கும் கிடைக்கும்.

இன்றைய தேவை: சுதேசிப் பொருள் ஆதரவு!

அதற்கு வழி "லேடன்" பெனியன்கள் காலமேஸ்களை அணிவதே.

உறுதியிலும் உயர்ச்சியிலும் மேனாட்டு பெனியன்களையும், காலமேஸ்களையும் மிஞ்சியது "லேடன்" பெனியன்களும், காலமேஸ்களும்.

தொழிற்சாலை

7, ஆஸ்பத்திரி வீதி. யாழ்ப்பாணம்.



பீடி புகைப்போருக்கு ஓர் அரிய வாய்ப்பு!

பட்டு நூல்

யானை பீடி

★ குணம் மணம் நிறைந்தது யானை பீடி ஒன்றே!

★ இலங்கையில் தரம் குறையாமல் தயாரிக்கப்படுவதும் தனக்கென ஒரு தனி இடத்தை வகுத்துக் கொண்டதும் யானை பீடி ஒன்றே!

★ எல்லோரும் விரும்பிப் புகைப்பதும் எங்கும் சுலபமாகக் கிடைக்கக் கூடியதும் யானை பீடி ஒன்றே!

★ உள்நாட்டுக் கைத் தொழிலுக்கு ஊக்கமும் ஆதரவும் அளியுங்கள்!




தயாரிப்பாளர்களும் விநியோகஸ்தர்களும்:

யானை பீடி கம்பெனி,

62, மெசஞ்சர் வீதி, — கொழும்பு.

போன்: 7651.

சுகாதாரத்திற்கு சுவையான ஆகாரத்திற்கு

## தாமோதர விலாஸ்

சொந்தக்காரர்: P. A. நடேசபிள்ளை
239, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

சுவையான ஆகாரங்களா....
சுத்த பசும்பால் குளிர்பானங்களா...
சுகாதார சைவ போசனமா...

தேவைகளுக்கு உடன் விஜயம் செய்யுங்கள்
விசேட ஆடர்கள் உடன் கவனிக்கப்பெறும்.



சினிமாஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரின் மகத்தான வெளியீடு!

## இப்பொழுது திரையிடப்படுகிறது!

கிங்ஸ்லி (கொழும்பு) — பிளாஸா (வெள்ளவத்தை)
நவா (கொம்பனித்தெரு) — கெப்பிட்டல் (ஆமர் வீதி கொழும்பு)
வெலிங்டன் — மனோகரா (யாழ்ப்பாணம்)
ஸ்ரீகிருஷ்ணா (திருகோணமலை) — விஜிதா (மஸ்கேலியா)
மொடர்ன் (பதுளை) — விஜயா (மட்டக்களப்பு)
லக்ஷ்மி (இரத்தினபுரி) — தீவொளி (நுவரேலியா)




சிவாஜி கணேசன்,
ஜெமினி கணேசன்,
எம். ஆர். ராதா,
எஸ். வி. சுப்பையா, சாவித்திரி
நடித்த

## பாவ மன்னிப்பு

எல்லோரும் குடும்பத்துடன் பார்த்து மகிழவேண்டிய படம்.

இப்பொழுது திரையிடப்படுகிறது!

## மனோஹரா (யாழ்ப்பாணம்)

தினசரி மாலை 4 மணிக்கும் சனி, ஞாயிறு காலை 10-30 மணிக்கும்

மார்லின் மொன்ரூ நடித்த

## ஸம் லைக் இற் ஹொற்
SOME LIKE IT HOT


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேலை வீதி, 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1961-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 29-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# ‘ஆசிரியரின் அரசியல் உரிமைகள் காக்க முன்வருக!’

## அகில இலங்கை ஆசிரியர் சங்கம் வேண்டுகோள்

கொழும்பு, திங்கள்

ஆசிரியர்களுக்கு வாய்ப்பூட்டுப் போடக்கூடிய நடவடிக்கையை எதிர்த்து நிற்குமாறு அகில இலங்கை ஆசிரியர்கள் சங்கம் சகல கிளை ஸ்தாபன ஆசிரியர்களையும் கேட்டுக்கொண்டிருக்கிறது.

“ஒரு பண்புள்ள சுதந்திர தொழிலைச் செய்யும் அங்கத்தினர்களய் நாம் இருப்பதா அல்லது அரசாங்க சேவையின் நிர்வாக யந்திர சக்கரத்தில் ஒரு ஆணியைப் போல் விளங்குவதா அல்லது அரசியல் சதுரங்கப் பலகையில் பகடைக் காய்களாக இருப்பதா என்பதை நாம் இப்போது தீர்மானிக்கும் தருணம் வந்துவிட்டது” என்றும் அகில இலங்கை ஆசிரியர்கள் சங்கம் தன் கிளைகளுக்குத் தெரிவித்திருக்கிறது.

ஆசிரியர்களின் அரசியல் உரிமையையும், சுதந்திரத்தையும் பறிக்கும் நடவடிக்கைக்கு லங்கா ஜாதிக குரு சங்கம் காட்டிவரும் எதிர்ப்பை சங்கம் பாராட்டியிருக்கிறது.


## மலிவு விற்பனை

“ஹான்ட் லூம்ஸ்” டெக்கா சேலைகள் சாதாரணமானது. “சில்க்” பைப்பிங் போடர்கள் போட்டவை. சாதாரண விலை ரூ. 15-40. விற்பனை விலை ரூ. 14-25. டயரும்ஸ், யாழ்ப்பாணம். 22

“கொமற்” “ஜோஜட்” சேலைகள். விற்பனை விலை ரூ 9-75 சதம். இத்துடன் 10 வீதம் கழிவு உண்டு என்பதை மறவாதீர்கள். டயரும்ஸ், யாழ்ப்பாணம் 23

“ஜூனியர் காஷ்மீர்” சேலைகள், “ஸ்கேட்” போடர்கள் போட்டவையும் எல்லா டிசைன்கள் போட்டவையும். ரூபா. 9-50 ரூ. 10-50 இதில் கூட 10 வீதம் கழிவு என்பதை மறக்காதீர்கள். டயரும்ஸ், யாழ்ப்பாணம். 24.

சாதாரண “ஷீர்” சில்க் சேலைகள் எல்லாவித கலர்களிலும் உள்ளன. விலை ரூ. 8-50 மாத்திரம். இதிலும் 10 வீதம் கழிவுண்டு என்பதை மறக்காதீர்கள். டயரும்ஸ், யாழ்ப்பாணம். 25

வெளிநாட்டிலிருந்து வரவழைக்கப்பட்ட “நைலன்” சேலைகள். “டியூ நொப்ஸ்” டிசைன் போட்டவையும் நல்ல தரமுள்ள கலர்களிலும் சாதாரண விலை ரூ. 47-50 விற்பனை விலை 32-50 10% கழிவுண்டு என்பதை ஞாபகப் படுத்துகிறோம். டயரும்ஸ், யாழ்ப்பாணம். 26

சின்னாலம்பட்டி ஹான்ட் லூம்ஸ் சேலைகள். “ஆர்ட்சில்க்” பூக்களும் றிபன் போடர்ஸ் போட்டவையும் சாதாரண விலை ரூ. 25 விற்பனை விலை ரூ. 22-50 சதம் 10%வீதம் கழிவுண்டு என்பதை ஞாபகப் படுத்துகிறோம். டயரும்ஸ், யாழ்ப்பாணம். 27

“ஹான்ட்லூம்ஸ்” பள்ளிக்கூட பாவனைக்குரிய சேலைகள் வெள்ளைக்கலரில் செக் டிசைன்கள் போட்டவையும் பைப்பிங் போடர்கள் போட்டவையும் சாதாரண விலை 13-50 விற்பனை விலை ரூ 12-75 10%கழிவு உண்டு என்பதை மறவாதீர்கள். டயரும்ஸ், யாழ்ப்பாணம். 28

புத்தம் புதிய சரக்குகள்! “கடாவ்” பிரின்டெட் வொயில் சேலைகள். ஓரியன்டல் டிசைன்களில் விலை ரூ. 13-50 தொடக்கம்.10%வீதம் கழிவுண்டு என்பதை ஞாபகப்படுத்துகிறோம். டயரும்ஸ், யாழ்ப்பாணம். 29


## முட்டை விற்பனை

கொழும்பு, ஞாயிறு

பொதுமக்கள் தேவையைச் சமாளிப்பதற்காக நிரந்தரமான விலையில் முட்டை விநியோகம் செய்வதென கூட்டுறவு மொத்த விற்பனை ஸ்தாபனம் உத்தேசித்துள்ளது,

கூ. மொ. வி. ஸ்தாபனத்துக்கென நேற்று முன்தினம் முதல்முதலாக முட்டை இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட 50,000 முட்டையில் 35,000 கூ. மொ. வி. ஸ்தாபனத்துக்காகும்.

இம்முட்டைகளை ஒன்று 23 சதவீதம் விற்பனை செய்யத் தீர்மானித்துள்ளார்கள் என கூ. மொ. வி. ஸ்தாபன அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். உள்நாட்டில் முட்டை ஒன்று 26 சதம் தொடக்கம் 28 சதம் வரை விற்கப்படுகின்றது.

## காங்கேசன்துறையில் கல்வி மந்திரி

மாவிட்டபுரம், திங்கள்

கல்வி அமைச்சர் பதியுதீன் மகமூத் இன்று காலை காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலைக்கு விஜயம் செய்தார். அவருடன் மூதூர் தொகுதி இரண்டாவது எம். பி. ஏ. எல். ஏ. மஜீத், கலகெதிர எம். பி. கே. ஏ. ஜபார் ஆகியோரும் விஜயம் செய்தனர்.

மந்திரியையும் எம். பி.க்களையும் சிமெந்துத் தொழிற்சாலை மேல் அதிகாரிகளான எஸ். சுப்பிரமணியம், கியு. ஏ. டி. மேதர் ஆகியோர் வரவேற்று சிமெந்துத் தொழிற்சாலையின் சகல பிரிவுகளையும் காண்பித்தார்கள். இங்கிருந்து (சிமெந்து தொழிற்சாலை) இராமநாதன் கல்லூரிக்கு விஜயம் செய்துள்ளார்.

அல்ஜீரியா

## திரு. அப்பாஸ் விலகினார்

அல்ஜியர்ஸ், ஆக. 28

அல்ஜீரிய சுதந்திர அரசாங்கத்தின் பிரதம மந்திரியாக திரு. பெர்ஹட் அப்பாசுக்குப் பதில் திரு. பென்கெட்டா நியமிக்கப்பட்டிருக்கிறார். அவர் தனது புதிய மந்திரிசபையை அமைத்திருக்கிறார். புதியபிரதமர் கடுமையான போக்கை உடையவர் என்றும் பிரான்சுடன் பேச்சுவார்த்தைகளில் அவர் கடும் மனோபாவத்தை அனுஷ்டிப்பார் என்றும் கூறப்படுகிறது.

## பிரேஸிலில் அவசரகாலநிலை?

லண்டன், ஆக. 28

பிரேஸிலில் ஜனாதிபதி குவாட்ரோஸ் ராஜினாமாச் செய்ததைத் தொடர்ந்து அங்கு ஏற்பட்டுள்ள நிலைமையைச் சமாளிக்கும்பொருட்டு, அவசரகால நிலையைப் பிரகடனம் செய்ய மக்கள் சபையில் அனுமதி கேட்கப்பட்டிருக்கிறது.

## வெளிமாணவரின் எதிர்காலம்?

### பல்கலைக்கழக அதிகாரிகள் கவலை

கொழும்பு, திங்கள்

அடுத்த ஆண்டு ஜூன்மாதம் சர்வகலாசாலை பயிற்சி வகுப்புகள் ஆரம்பிக்குமுன்னர் வெளிமாணவர்களின் எதிர்காலம் பற்றியும் அவர்களுக்கென கொழும்பில் இரண்டாவது சர்வகலாசாலை ஒன்றை ஸ்தாபிப்பது பற்றியும் அரசாங்கத்துடன் கலந்தாலோசிக்க சர்வகலாசாலை அதிகாரிகள் தீர்மானித்துள்ளனர்.

இவ்வருடம் வெளிமாணவர்களுக்கு பேராதனையில் பயிற்சியளிக்கப்பட்டாலும் தொடர்ந்து அவர்களுக்கு பயிற்சி அளிப்பது என்பது இயலாத காரியம் என சர்வகலாசாலை அதிகாரிகள் கருதுகின்றனர்.

## மாஸ்டர் தாராசிங்கை கைதுசெய்ய வாரண்டு

அமிர்தசரஸ், ஆக. 27

சாகும்வரை உண்ணாவிரதம் இருந்துவரும் மாஸ்டர் தாராசிங், அகாலி தள தற்காலிக தலைவர் திரு. பத்தேசிங், பொற்கோயிலுக்குள் தங்கியுள்ள இதர அகாலித் தலைவர்கள் ஆகியோரைக் கைது செய்ய வரண்டுகளை நகர மாஜிஸ்திரேட் நேற்று பிறப்பித்தார்.

கிரிக்கெட்

## சென்னைக்கு வெற்றி

புதுடில்லி, ஆக. 28

சென்னைக்கும் கேரளத்துக்கும் நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில், சென்னை ஒரு இன்னிங்ஸ் 45 ரன்களால் வெற்றிபெற்றது.

## கேள்வித்தாள்கள் வெளியாகின

### வாய்மொழி மூலம் கேள்விகள்!

யாழ்ப்பாணம் செவ்வாய்

யாழ்ப்பாணம் ஸ்ரான்லி கல்லூரியில் நேற்று நடைபெற்ற யாழ்ப்பாண நெசவுப் பாடசாலை பிரவேசப்பரீட்சைக்கான கேள்வித்தாள்கள் முன்னரே வெளியாகிவிட்டதன் காரணமாக அதிகாரிகள் கேள்விகளை உடனேயே தயாரித்து வாய்மொழி மூலம் பரீட்சார்த்திகளுக்கு தெரிவித்தார்கள்.

கேள்வித்தாள்கள் வெளியான செய்தியை யாழ்ப்பாண உதவி கூட்டுத் தொடர்பு அதிகாரியிடம் சிலர் சென்று தெரிவித்தார்கள். இதைத் தொடர்ந்தே மேற்படி நடவடிக்கை எடுக்கப்பட்டது.

திருக்கோணமலை, மன்னார், மட்டக்களப்பு ஆகிய இடங்களிலிருந்தும் மாணவர்கள் இப்பரீட்சைக்கு இங்கு வந்திருந்தார்கள்.

## பெல்கிரேட் மகாநாட்டுக்கு

### இன்று பிரதமர் பயணம்

கொழும்பு, செவ்வாய்

அடுத்தமாதம் முதல் திகதியிலிருந்து ஒன்பதாம் திகதி வரை பெல்கிரேடில் நடைபெறும் நடுநிலைமை நாடுகளின் உச்சிமகாநாட்டில் கலந்துகொள்வதற்காக, பிரதம மந்திரி திருமதி. ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவின் தலைமையிலான இலங்கைப் பிரதிநிதிகள் கோஷ்டி இன்று பிற்பகல் 4-45 க்கு ரத்மலானை விமான நிலையத்திலிருந்து புறப்பட்டுச் செல்லும். பிரதம மந்திரி திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா அடுத்தமாதம் 11-ம் திகதி இலங்கை திரும்புவார்.

சாம்ராஜ்ய மகாநாட்டில் கலந்துகொள்வதற்காக நிதிமந்திரி பெல்கிரேடிலிருந்து கானா தலைநகரமான அக்ராவுக்குப் புறப்பட்டுச் செல்வார்.